# மாகாண சங்கச் சிறப்பிதழ்

"காத்தா நகரத்தைக் காக்காவிட்டால்
அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

# காவலன்

தந்தி: "இதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்
தொலைபேசி: 300.
Registered at the Ceylon G. P. O. as a Newspaper

93-ம் புத். | யாழ்ப்பாணம், 1968-ம் ஆண்டு ஆனிமீ 1-ந்உ சனிக்கிழமை — பிரதி சதம் 15 | 21-ம் இல



இலங்கை
மாகாண சங்கம்
ஆனி 2—10

இது சம்பந்தமான
நம் மேற்றிராணியாரின்
கடிதத்தை
4 ஆம்பக்கம் பார்க்கவும்




# கொழும்பு அதிமேற்றிராசனத்தில் மேலும் இரு துணை ஆயர்கள்

● வண. சுவாமி எட்மன்ட் ஜோசவ் பெர்ணுந்து, O. M. I. ● வண. சுவாமி ஒஸ்வல்ட் கொல்மன் கோமிஸ்

**கொழும்பு அதிமேற்றிராசனத்தில், கருதினல் கூறே ஆண்டவர் அவர்களுக்குத் துணைச்செய்ய மேலும் இரு துணை ஆயர்களைப் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் நியமித்திருக்கிருர். இச்செய்தியைப் பரிசுத்த தந்தை வைகாசிமாதம் 22-ம் திகதி வெளிப்படுத்திஞர்.**

வண. எட்மன்ட் பெர்ணுந்து அடிகளார்: இவரின் வயது 47. தற்போது கண்டி அம்பிற்றியாவில் குருமாணவர் கல்லூரியில் ஆன்ம கரும ஆலோசகராகக் கடமையாற்றுகிருர். 1921-ம் ஆண்டு பங்குனி மாதம் 25-ந் திகதி நீர்கொழும்பு பிரதேசத்தில் பிற்றப்பானு எனும் கிராமத்தில் திரு. ஜோண் பெர்ணுந்து அவர்களுக்கும், ஹெறிய மார்கறெட் அம்மையாருக்கும் புத்திரனுகப் பிறந்தார். இவர் ஆரம்பத்தில் நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியில் கலவி கற்று, கொழும்பு சென் பேர்ணுட் குருமாணவர் கல்லூரியிலும் பின்பு ரோமாபுரி இறகொரியன் சர்வகலாசாலையிலும் பயின்று வேதசாஸ்திர, தத்துவசாஸ்திர பட்டங்கள்பெற்று 1949-ம் ஆண்டு குருப்பட்டம் பெற்றவர், இவர் பெற்றுக்கொள்ளும் விஸ்பு அதிகார மகுட நாமம் ஐல்கிலி மேற்றிராணியார் என்பதே.

வண. ஒஸ்வல்ட் கொல்மன் கோமிஸ் அடிகளார்: இவர் வயது 36. கெலனியாவில் திரு. வின்சென்ற் கோமிஸ் என்பவருக்கும், மேரி புளொறின்டா அம்மையாருக்கும் 1932-ம் ஆண்டு மார்கழி மாதம் 12-ந் திகதி புத்திரனுகப் பிறந்தார். ஆரம்ப கல்வியை கொழும்பு சென். யோசப் கல்லூரியில் முடித்த பின், குருவுக்குரிய படிப்புகளை சென் பேர்ணுட் குருஸ்தாபனத்திலும் பின்பு கண்டி அம்பிற்றியா குருமார் கல்லூரியிலும் பெற்று 1958-ம் ஆண்டு குருப்பட்டம் பெற்றருளிஞர். அதன்பின் சென்ற் அலோசியஸ் கனிஷ்ட குருமாணவர் சாலையில் போதகராகவும், கொழும்பு கத்தோலிக்க அச்சக அதிபராகவும் கடமையாற்றினவர். தற்போது அச்சக அதிபர் வேலையுடன் சிங்கள கத்தோலிக்க பத்திரிகை ஞானர்த்தபிரதிபாயாவின் ஆசிரியராகவும் தொண்டாற்றுகின்ருர். இவர் பெறும் விஸ்பு அதிகார மகுட நாமம் மியூலியா மேற்றிராணியார் என்பதே.

## திருப்பிக் கொடுத்தார்

ஆங்கில நாட்டிலே, வெலஸ் பிரதேசத்திலே மினேவியா மேற்றிராசனத்திலே மேற்றிராணியாராக இருக்கும் பெற்றிற் அடிகளார் சென்ற வாரம் தமது குருத்துவ பொன் யூபிலியைக் கொண்டாடினார். அவரது மேற்றிராசன மக்கள் அத்தருணம் அவருக்கு 15,000 பவுண் ஒன்று சேர்த்து அன்பளிப்பாகக் கொடுத்தனர். அப்பணம் முழுவதையும் பெற்றிற் அடிகளார் அவசியமாக ஒரு வறிய கிராமத்தில் கட்டப்படவேண்டிய கோவில் கட்டி எழுப்புதற்கென அப்பிரிவு விசாரணைக் குருவானவருக்கு அக் கொண்டாட்டத்திலேயே கொடுத்துவிட்டார். யூபிலி வைபவத்தில் பாப்பரசரின் ஸ்தானிகரான கருதினல் காடினல் அவர்களும் மேலும் 15 மேற்றிராணிமாரும் பங்கு பெற்றுக் கொண்டனர்.

## பாப்பரசரும் தாய்மாரும்

சென்ற வாரம் ஞாயிறு தினம் பல்லாயிரக்கணக்கான பெண்மக்கள் சம்பேதுரு சதுக்கத்தில் குழுமியிருந்தனர். அன்று தாய்மார் தினம். பாப்பரசர் அவர்களுக்குப் பேட்டியளித்து ஆசீர்வதித்து நன்மக்களாகத் தம் பிள்ளைகளை வளர்த்து வருமாறு கேட்டுக்கொண்டார்.

## ஒரு குருவானவருக்கு இருதய மாற்றம்

பல தேசங்களிலும் வைத்தியர்கள் இருதய மாற்றம் செய்து வருகின்றனர். ஒரு குருவானவருக்கு இருதய மாற்றச் சிகிச்சை அண்மையில் பிரான்சு தேசத்தில் செய்யப்பட்டது. குருவானவர் வண. ஜீன் பூலோங் என்பவரே. இவர் மார்சேல்ஸ் பிரதேசத்தைச் சேர்ந்தவர். இவர் வயது 45. இவருக்கு மாற்றிய இருதயம் 35வயதுடைய ஒரு ஆண் மகனுடையது. இரு வாரங்கள் சென்றுவிட்டன. குருவானவர் சுகத்துடன் இருக்கிருர். பூரண சுகம் அடைவாரென அவர் வைத்தியர் கூறுகின்றனர். இது பிரான்சு தேசத்தில் செய்த மூன்ரும் இருதய மாற்றமாகும்.

## வியற்னும் சமாதானத்துக்கு இலங்கையில் சகல சமய செப தினம்

வியற்னமில் சமாதானம் விரைவில் வந்தடைய, இலங்கையிலுள்ள சகல பிரதான சமயத்தவரும் ஒன்று சேர்ந்து சென்ற 26-ந் திகதியை ஒரு பொதுச் செபதினமாக அனுசரித்துக்கொண்டனர். கிறிஸ்தவ, இந்து, பௌத்த, இஸ்லாமிய தேவாலயங்களில் செபங்கள் ஒப்புக்கொடுக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன. "இம் முயற்சிக்கு இலங்கைக் கத்தோலிக்கர் யாவரும் தமது பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் தருவது திண்ணம்" எனக் கருதினல் கூறே அவர்கள் கூறியிருந்தார்.

## பாப்பரசர் தென் அமெரிக்காவுக்குச் செல்வார்

இந்த வருடம் ஆவணி மாதம் தென் அமெரிக்க கண்டத்தில் கொலம்பியா பிரதேசத்தில் பெகோட்டா நகரில் நடக்க இருக்கும் சற்பிரசாத மகாநாட்டில் பங்கு பெற்றுக்கொள்ள அவ் வைபவத்தின் இறுதி நாட்களில் அங்கு செல்ல இருப்பதாக சென்ற வாரம் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசர் தாமே உறுதி அளித்திருக்கின்ருர். பல மாதங்களாக மக்கள் மனதில் பாப்பரசர் பெகோட்டா செல்வாரோ என்று இருந்த சந்தேகம் இத்துடன் நீங்கி விட்டது. பரிசுத்த தந்தை ஆவணி 25-ம் திகதி அங்கு வருவாரெனவும் இரு நாட்கள் அங்கு தங்கியிருப்பாரெனவும் அப்பிரதேச கத்தோலிக்க அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர். லத்தீன் அமெரிக்காவுக்கு ஒரு பாப்பரசர் விஜயம் தருவது இதுவே முதல்முறையாகும். ஆனல் பரிசுத்த தந்தை பாப்பரசராவதற்கு முதல் தென அமெரிக்காவுக்குச் சென்றிருக்கின்ருர். பாப்பரசர் தமது பிரயாணத்தைப் பற்றிக் கூறியபோது, தென் அமெரிக்க கண்டத்திலுள்ள மறு தேசங்களுக்கு இப் பிரயாணத்தில் போக முடியாது இருப்பதற்கு வருத்தம் தெரிவித்து [illegible] பாப்பரசர்க்கும் இலகுவான கருமமாய் இருக்குமெனவும் அறிவித்திருந்தார்.

## சமூகத் தலைவராவதற்கு மாணவருக்குப் பயிற்சி

நீர்கொழும்பு ஆவேமறியா கல்லூரி மண்டபத்தில் இலங்கை உயர்தர கல்லூரிகளிலிருந்து தெரிந்தனுப்பப்பட்ட 150 பிரதிநிதிகளுக்கு வைகாசி மாதம் 1-ம் திகதி தொடக்கம் 4-ம் திகதிவரையும் உண்மையான சமூகத் தலைவராவதற்கு விசேஷ பயிற்சி அளிக்கப்பட்டது; வணக்கத்துக்குரிய இயூறியகோஸ் சுவாமியாரும் வணக்கத்துக்குரிய லூசியன் பெர்ணுந்து சுவாமியாரும் [illegible] விசேஷ பங்கு எடுத்துக்கொண்டனர். எமது நாட்டில் பலவகைப் பிரிவுகளை ஏற்படுத்திப் பலவீனப்படுத்தும் சக்திகளை எவ்வாறு எதிர்க்வேண்டுமென்றும் ஒற்றுமைக்காக எவ்வாறு நம்மை அர்ப்பணம் செய்யவேண்டுமென்றும் போதிக்கப்பட்டது. நாட்டின் பொது நன்மைகளில் பங்கு பெற மாணவர்களிடையே ஒரு துடிப்பு ஏற்படுத்தவேண்டுமென்பதே இப் பயிற்சியின் நோக்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துவ தொழிலாளி

பி. ஜே. அமிர்தநாயகம்

கிறிஸ்து அதிஉன்னத தொழிலாளி. கிறிஸ்தவர்கள் எல்லோரும் கிறிஸ்துவில் தொழிலாளிகள். கிறிஸ்தவன் கிறிஸ்துவால் சீவிக்கிறவன். கிறிஸ்துவில் சீவிக்கிறவன். கிறிஸ்துவோடு சீவிக்கிறவன். கிறிஸ்துவுக்காகச் சீவிக்கிறவன். எனவே, அவன் ஒருபோதும் ஒன்றையும் கிறிஸ்துவுக்குப் புறம்பாய்ச் செய்வதில்லை. அவன் தனித்து இயங்குவதில்லை. சமூகத்தில் சீவிப்பவன் எப்படித் தனியனாகச் சீவிக்கலாம்? சுயநலம் கூடக்கூட எப்படி ஒருவன் சமூகத்திற்குப் புறத்தியில் இருக்கிறானோ அப்படியே பாவத்தில் சீவிக்கிறவன் கிறிஸ்துவுக்குத் தன்னை அப்பாற்படுத்திவிடுகிறான். ஆனால், கிறிஸ்துவில் சீவிப்பவனோ தான் செய்யும் தொழில்கள் யாவும் கிறிஸ்துவுக்காகவே செய்கிறான். கிறிஸ்து அவதாரமான தேவன். அவர் அன்பின் அவதாரம். அவர் தன் அன்பால் எல்லோரையும் தன்னுடன் ஐக்கியப்படுத்துகிறார். கிறிஸ்துவில் சீவிக்கும் தொழிலாளி சகலத்தையும் அவருடைய அன்புக்காகவே செய்கிறான். அவனுடைய தொழில் சாதாரண மக்களுக்கு இழிவானதாகத் தோன்றலாம். ஊதியம் குறைவானதாய் இருக்கலாம். சமூகம் அவனையும், அவனுடைய தொழிலையும் பாராட்டாமல் விடலாம். ஆனால், அவன் அதைக் கிறிஸ்துவுக்காகச் செய்யும்போது அவன் தொழில் தேவனால் மிகவும் பாராட்டப்படுகிறது. நூறுமடங்கு பலன் அளிக்கிறது. கிறிஸ்துவே அவனின் சம்பாவனை.

## நீதியுடன் உழைக்கிறான்

கிறிஸ்தவன் சகல தொழில்களையும் கிறிஸ்துவின் அன்புக்காகச் செய்யும்போது கிறிஸ்துவின் சகோதரர்களாகிய எல்லோரையும் நீதியுடன் நடத்துகிறான். அன்பு சுயநலமற்றது. எவரையும் நீதியுடன் நடக்கச் செய்கிறது. கிறிஸ்து பிதாவின் சுதன், அவரின் அவதாரத்தால் சகலமனிதரையும் பிதாவின் பிள்ளைகளாக்கினார். எல்லோரையும் கிறிஸ்து தனது சகோதரர் ஆக்கினார். எவ்வளவு அழகான சமுதாயம்! எல்லோரும் சகோதரர்கள்!! கடவுள் எல்லோரின் அன்புநிறைந்த அப்பா. ஒவ்வொரு மனிதனும் கிறிஸ்துவின் அன்புக்காகத் தன் சுயநலத்தை ஒழிக்கிறான். இப்பொழுது கிறிஸ்துவே அவனை ஆளுகிறார். கிறிஸ்துவின் அன்பால் வரும் பூரண சுதந்திரத்தை அடைந்துவிட்டான். என்ன அழகான சகோதரத்துவம்! இந்தச் சகோதரத்துவத்தில் வெறுப்பும் பகையுமில்லை. காள் மார்க்ஸ் (Karl Marx) போதித்த பொது உடமை உருவாக்கும், அடக்கும் சர்வதிகாரப்போக்குமில்லை மனித சுதந்திரம் கட்டுப்படுவதில்லை. கிறிஸ்துவின் அன்பால் சுயநலம் பொதுநலமாக மாறுகிறது. மனிதன் கிறிஸ்துவில் எல்லோரையும் சகோதரர்களாய்ப் பெற்றுக்கொள்ளுகிறான். தான் பிறத்தியான் என்று இல்லை, எல்லோரும் கிறிஸ்துவின் அன்னியோன்னிய அங்கங்களாகிறோம். என்ன அழகான சகோதரத்துவம்! தனக்கென்றும் பிறர்க்கென்றும் வேற்றுமைப்படுத்தாதவன் கிறிஸ்தவன். அவன் தன் தொழிலிலும் ஊதியத்திலும் சகலரையும் தனது அண்ணன்போலும் தம்பிபோலும் அன்புடனும் மரியாதையுடனும் நடத்துகிறான். அவனுடைய சட்டம் அன்பு. அவனுடைய நீதிபதி கிறிஸ்து. கிறிஸ்தவனை ஆள வெளி அதிகாரி தேவையில்லை. அவனை மறியலாலும் பொலிசாராலும் கட்டுப்படுத்தத் தேவையில்லை. கிறிஸ்துவின் அன்பே அவனுக்குச் சட்டம். மனிதர் எல்லோரையும் தன்னைப்போல் பாவிக்கிறான். ஏனெனில் ஒவ்வொருவரும் ஒரு கிறிஸ்து. கிறிஸ்துவை எல்லோரிலும் காண்பவன் கிறிஸ்தவன்.

## பதினொராம்மணி நேரத்தில்!

ஆம், நாங்கள்பாவிகள், பதினொராம் மணி நேரத்தில் கிறிஸ்துவால் தனது தோட்டத்திற்கு வேலைக்கு அழைக்கப்பட்டிருக்கிறோம். வேலைமுடியும்நேரம், பிந்திப்போனோம். ஆனால், முழுச்சம்பளமும் பெறுவோம். அதற்குக் கிறிஸ்துவே சாட்சி, அவரே சம்பாவனை. சந்தோஷமாய்த் தொழிலைச் செய்வோம். கிறிஸ்துவே எல்லோரையும் அழைப்பவர். சகல உழைப்பும் அவருக்கே! அது சரீரப்பிரயாசையான வேலையாய் இருக்கலாம், மூளையை வருத்தும் வேலையாய் இருக்கலாம். தாழ்த்தப்பட்டவரின் தொழில் என்று நினைக்கப்படலாம். ஆனால், எங்கள் தொழில் கிறிஸ்துவுக்குத் தேவை. சம்பாவனை அளிப்பவரும் அவரே. மகிமைப்படுத்துபவரும் அவரே. சகல இராசாக்களின் இராசாவின் சேவையில இருக்கிறோம் என்பதே கிறிஸ்தவனின் மகிமை. இதுவே அவனின் பெருமை. வேறு என்னவேண்டும்? அரசர்களெல்லோருக்கும் அரசனாகிய தேவன் எங்கள் சேவையை விரும்புகிறார். அதுவே போதும்! சொற்பநேரம்தான் இருக்கிறது, எங்கள் முழு இருதயத்தோடும் கிறிஸ்துவில் உழைப்போமாக. தொழிலாளியின் கஷ்டமான உழைப்பு கிறிஸ்துவுக்கே!

## தேவனின் பராமரிப்புக்கு

என்ன பாக்கியம்! தேவன் பிதா. ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவபராமரிப்பின் கரங்கள். தேவன் தெரிந்தெடுத்த கரங்கள். அன்பின்கரங்கள். தேவன் மகிமைப்படுத்தும் கரங்கள். அவைகள் செய்வது ஆத்தும நன்மைகளாய் இருக்கலாம், அல்லது சரீர நன்மைகளாய் இருக்கலாம். அன்புடனும் நீதியுடனும் ஒரு கிறிஸ்துவதொழிலாளி உழைக்கும்போது அவன் தேவபராமரிப்பின் உன்னத கரங்களாய் இருக்கிறான். இக்கரங்களின் சிறந்த எடுத்துக்காட்டு கிறிஸ்துவே. அவரின் கரங்கள் எல்லோரையும் ஆசீர்வதித்தது, அரவணைத்தது, சொஸ்தப்படுத்தியது, பாவச்சேற்றிலிருந்து தூக்கியது, தண்ணீரை இரசமாக்கியது, ஆயிரக்கணக்கானோர் வழியில் சோராவண்ணம் சரீர உணவை அளித்தது. சேவையே உன்னத குறிக்கோள் என்று காட்டும்படியாகத் தனது சீடர்களின் பாதங்களைக் கழுவியது. கடைசியாக எல்லோரையும் ஆசீர்வதிக்க விரித்த கைகளை, என்றும் அப்படியே இருக்கிறேன் என்றுகாட்ட விரித்து அறையப்பட்ட கரங்களுமாய் திறக்கப்பட்ட இருதயமுமாய்ச் சிலுவையில் காட்சியளித்தார்! அன்பின் சமுத்திரம் விசாலமாக விரிக்கப்பட்டது. அதற்கு வரம்பேயில்லை. எல்லோரும் அதில் பானம் பண்ணலாம். தாகம் தீர்க்கலாம். இதில் பானம்பண்ணுகிறவன் ஒருபோதும் தாகமாய் இருக்கமாட்டான். கிறிஸ்துவின் நாமத்தினாலே ஒரு கோப்பை தண்ணீர் தன் சகோதரனுக்குக் கொடுப்பவன் கிறிஸ்துவையே சம்பாவனையாய்ப் பெறுவான். கிறிஸ்துவில் பராமரிப்பவன் கிறிஸ்தவன்.

## ஒருபாத்திரத் தண்ணீர்

காயீன் தனது தம்பியாகிய ஆபேல் மட்டில் நடந்ததுபோலல்ல கிறிஸ்துவ தொழிலாளி. எல்லோரும் ஒருவர் மற்றவரின் சகோதரன். அன்புநிறைந்த அண்ணனும் தம்பியும். எல்லோரையும் கிறிஸ்துவுக்காக நேசிக்கிறோம். எல்லோரும் கிறிஸ்து என்று பாராட்டுகிறான் கிறிஸ்துவுக்காக அவர்களின் குறைகளை மன்னிக்கிறான், சகிக்கிறான். கிறிஸ்துவின் அன்பால் எல்லோரையும் ஒரு கிறிஸ்துவ குடும்பமாக்கி வளரச் செய்கிறான். அன்பினால் சமுதாயத்தை ஐக்கியப்படுத்துகிறான். அவனுடைய அன்பின் உழைப்பு வரம்பற்றது. கிறிஸ்துவில் பரமதிரீத்துவத்தையும் கிறிஸ்துவின் புனிதர்களின் ஐக்கியப் பிரயோசனத்தையும் காண்கிறான். துன்பம், வறுமை, நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு அநேகபாத்திரத் தண்ணீரைக் கொடுத்துதவிக் கிறிஸ்துவுக்குத் தன் அன்பைக் காட்டுகிறான். கிறிஸ்தவர்களில் தொழிலாளி முதலாளி என்றும் நசுக்கப்படுபவர் நசுக்குபவர் என்றும் இருவர்க்கமில்லை. கிறிஸ்துவில் எல்லோரும் சகோதரர். கிறிஸ்து எல்லோருக்கும் முதலாயிருந்தும் தனது சீடர்களின் பாதங்களைக் கழுவி முதலிடம்பெற விரும்புவோர் எப்படி மிகவும் தாழ்மையுடன் கடவுளுக்குச் சேவைசெய்ய வேணுமென்று தெளிவாய்க் காட்டியிருக்கிறார். கிறிஸ்தவன் கிறிஸ்துவுக்காகத் தன்னைத் தாழ்த்துகிறவன்.

## தொழிலாளியும் சிலுவையும்

கிறிஸ்து திருச்சபையின் உன்னத தலை. தலை மோட்ச கூடாரத்திற்குள் போய்விட்டது. அவரின் உடலும் மற்றும் அங்கங்களும் இன்னும் வெளியில்தான் இருக்கின்றன. கிறிஸ்து மோட்சத்தில். சில கிறிஸ்தவர்களும் மோட்சத்திற்றான். ஆனால், அநேகர் இன்னும் போகவில்லை. அவர்கள் கிறிஸ்துவின் பாதையிலே செல்ல முயலுகிறார்கள். அது சிலுவைப்பாதைதான். கிறிஸ்துவே அவர்களைக்கொண்டு நடத்துகிறார். மோட்சத்தின் பாதை காடுமூடானது, ஒடுங்கியது. அதற்கு அஞ்சவேண்டியதில்லை. கொண்டு செலுத்துபவர் கிறிஸ்துவே. அவர் தவறு இல்லாத மாலுமி. அவருடைய மரணத்தாலும் உத்தானத்தாலும் பாவத்திலும் மரணத்திலும் வெற்றிபெற்றார். கிறிஸ்தவன் தனியாகச் செல்வதில்லை. சகல புனிதர்களுடனே செல்கிறான். புனிதர்களின் சம்பாவனைக்குச் செல்கிறான். கிறிஸ்துவின் சிலுவையைத் தாங்கிச் செல்கிறான். சிலுவை இனிமையாகிவிட்டது. தேவனிலும் தேவனின் வெற்றியிலும் புனிதர்களின் அன்பிலும் சிலுவை இனிமையாகிவிட்டது. கிறிஸ்துவ தொழிலாளி தன் கடமைகளில் பரமானந்தம் அடைகிறான். அவனுக்குப் பூவுலகிலேயே மோட்சம் ஆரம்பித்துவிட்டது. ஏனெனில் அவன் தனித்தொழிலாளியல்ல. அவன் கிறிஸ்தவ தொழிலாளி. அவன் உலோகாயத மூகாந்தரங்களால் உந்தப்படாது தேவனால் நடாத்தப்படுகிறான். மண்ணுலகை நோக்கி உழையாது விண்ணுலகை நோக்கி உழைக்கிறான். அழிந்துபோகும் செல்வங்கள் அவனை அழைப்பதில்லை. தேவனின் அழியாத செல்வமாகிய மோட்சமே அவனைக்கவர்கிறது.

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

# சமூகத் தொடர்புக் கருவிகள்

— ஆசிநாதர் —

மனிதன் சமூகத்தில் வாழ்கின்றான்; சமூகவாழ்வின் தன்மையாலேயே மனிதனின் தனிவாழ்வு நிறைவு பெறுகின்றது.

தனிமனிதன் எவனும் சமூகத்துடன் தொடர்புபூண்டு வாழவேண்டிய நியதி பெற்றிருப்பதால், சமூகத்தொடர்புக்குரிய சாதனங்கள்பற்றி அறிந்துகொள்வது அவசியமாகின்றது.

நம் திருமறைச்சார்பில்— 'சமூகத் தொடர்புக் கருவிகள்' என்னும் சொற்றொடர் புதியதானதாகவும், புதுமையானதாகவும் கருதப்படக்கூடும். இச்சொற்றொடர் விளக்கும் பொருளுக்கும், சமயத்துக்கும் எவ்வித தொடர்பும் கிடையாதுஎன நம்முட் பலர் எண்ணவுங்கூடும்.

வத்திக்கான திருச்சங்கம் சமூகத் தொடர்புக் கருவிகள்பற்றி விரிவான தீர்மானத்தை வெளியிட்டிருக்கிறது.

கிறீஸ்து பெருமானின் நற்செய்தியைப் பரப்புவதில் சமூகத்தொடர்புக் கருவிகளைக் கண்டிப்பாகக் கையாளவேண்டுமெனத் தாய்த்திருச்சபை வலியுறுத்துகின்றது.

## சமூகத்தொடர்புக் கருவிகள் எவை?

உலக சமூகங்களிடையே இணைப்பையும், தொடர்பையும் ஆக்கும் விசேட கருவிகளாக இன்று விளங்குபவை: (i) அச்சுவெளியீடு (ii) வானொலி (iii) திரைப்படம் (iv) தொலைக்காட்சி எனபனவே. இவற்றில் தொலைக்காட்சி எமநாட்டிற் பாவனைக்கு இன்னும் வரவில்லை.

இச்சாதனங்கள் பொதுநன்மைக்குரியனவே. இவற்றைச் சமயச்சார்பில் பயன்படுத்துவது எம்மவரின் பொறுப்பான கடமையாகும்.

நற்செய்தியைப் பரப்புவதிலும், இறைவனின் மகிமையைப் பறைசாற்றுவதிலும் இக்கருவிகளை அதிகமதிகமாகப் பயன்படுத்த வேண்டும். இச்சாதனங்கள் 'கடவுளின் கொடைகள்' எனப் பாப்பிறை 12ஆம் பத்திநாதர் பகர்ந்துள்ளார்.

இச்சாதனங்கள் மூலம் எம்திருமறைச் செய்திகளையும், கருத்துக்களையும், கோட்பாடுகளையும், படிப்பினைகளையும் மக்களிடையே எளிதாகப் பரப்பலாம்.

சமூகத்தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்துவதில் நம்கிறீஸ்துவ சமூகம் மிகவும் பின்தங்கியுள்ளது.

பொதுமக்களுக்கும் சிறப்பாக இளைஞர்க்கும் இவை நல்முறையில் வழங்கப்படாத பெருங்குறையினால் பல சமூகச் சீர்கேடுகளும், ஒழுக்கத் தவறுகளும் நிகழ்கின்றன.

இச்சாதனங்கள் உலகில் பெற்றிருக்கும் வலிமையையும், வளமையையும் வரையறுத்துச் சொல்லமுடியாது. பலரும் பல்வகைத் துறையிலும் இச்சாதனங்களைப் பயன்படுத்தித் தம் கொள்கைகளை, செய்திகளை, கோட்பாடுகளைப் பகிரங்கப்படுத்தி வருகின்றனர்.

திருமறை இலக்கிய வெளியீடுகள் எம்மத்தியில் இன்னும் போதிய செல்வாக்கடையவில்லை.

எம்சமயப் பத்திரிகைகள்தானும் மக்கள் மத்தியிற் போதிய ஆதரவு பெற்றுவிடவில்லை.

நல்வாசிகதினம், அச்சுப்பிரசுர வாரம், வேதநூல் விநியோக இயக்கம் என்பன இடையிடை நடைபெறுகின்றதாம். சமயச்சார்பான திரைப்பட, வானொலி நிகழ்ச்சிகள் நடைபெறுவது பூச்சியமாகவே யுள்ளது.

சமூகத் தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்துவதில் நாம் செயலற்றிருப்பதால்தான் அவற்றின்போராற்றலை நாம் உணராதிருக்கின்றோம்.

சமூகத்தொடர்புக் கருவிகளைச் சமயமுறையில் பயன்படுத்துதற்கேற்ற நிலையான இயக்கம் தோற்றுவிக்கப்படல் வேண்டும். இவ்வியக்கம் நம் மதத்தவரிடை சிறப்புப்பணி புரிய வேண்டும்.

நம் சமயமக்களிடையே வாசிக்கும் பழக்கம் வளர்ச்சியடையச் செய்தல் வேண்டும்.

நடைபெறவிருக்கும் மாகாணச் சங்கத்திலும் இவ்விடயம் விவாதிக்கப்படும்என எதிர்பார்க்கப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மந்திரியின் முன்மாதிரிகை

யாழ்ப்பாண மாநகரசபைக் குடிநல—சுகாதாரவார விழாவை ஆரம்பித்து வைத்த மந்திரி திரு. எம். திருச்செல்வம் அவர்கள் ஒருமுன்னேடியாகவும், முன்மாதிரியாகவும்சென்று நாவாந்துறை, சோனகதெருப்பகுதியில் விளக்குமாறுபிடித்து வீதிகளைக்கூட்டித் துப்புரவுசெய்தார். அத்தருணம் அவருடன் மாநகரசபைப் பதில்ஆணையாளர் திரு. வி. தங்கவேல், உள்ளூராட்சி உதவிஆணையாளர் திரு. எஸ். முருகவேள்ஆகியோரும் வீதிகளைத் துப்புரவுசெய்வதில் ஈடுபட்டார்கள்.

## அரசாங்க அதிபரின் நன்மதி

யாழ்ப்பாண மாநகரசபைக் குடிநல—சுகாதாரவிழாவின்போது யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா அவர்கள் பேசியபொழுது: "வீட்டுத்துப்புரவுதான் நாட்டுத்துப்புரவாகும். ஆகவே, எமதுவீடுகளையும், வீதிகளையும் துப்புரவாக வைத்திருப்பதை இந்தவாரத்தில்மட்டும் செய்யாது தினமும் செய்யவேண்டும். கண்டகண்ட இடங்களிலெல்லாம் வெற்றிலைதுப்புவதை முதலாவதாக நாம் இன்றுமுதல் நிறுத்திக்கொள்ளவேண்டியது அவசியமாகும். அவ்வாறு துப்புவது பலநோய்களும் பரவ ஏதுவாயிருக்கிறது" என்று கூறினர்.

## பரிதாபகரமான மரணம்

"தினகரன்" விளையாட்டுவிழாவின்போது யாழ்ப்பாணத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சைக்கிள் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்டஒருசைக்கிள்வீரரான குருநகரைச்சேர்ந்த துரைசிங்கம் கிறிஸ்டியன்எனும் இளைஞர் வழியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட விபத்தினல் மரணமாயினர். போட்டியிலீடுபட்ட இந்தஇளைஞர்ஓடிச்சென்ற சைக்கிள் இடையிலே ஒருவாகனுடன் மோதியகாரணமாக இவர்படுகாயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அன்றிரவு அங்கே மரணமானர். 1967ஆம்ஆண்டு நடைபெற்றசைக்கிள் ஓட்டப் போட்டியொன்றில் இவர்முதலிடம்பெற்றிருந்தார். இவரின்பிரேதம் சென்றசெவ்வாய்க்கிழமை பிற்பகல் அபிமானிகளும், அனுதாபிகளும், உறவினரும் மிகப்பெருந்திரளாகச் சமுகங்கொடுக்க, பெருங்கவலைநிறைந்த சூழ்நிலையில் அமைதியாக நடந்தேறியது. இவரின் ஆன்மா சாந்திஅடைவதாக.

## கடுகதி பஸ்விபத்து

மாத்தறையிலிருந்து அம்பாறைக்குச் சென்றசனிக்கிழமை பிரயாணிகளை ஏற்றிச்சென்ற கடுகதிபஸ்ஒன்று மாத்தறையிலே தடமல்லன்றஇடத்தில் தடம்புரண்டதால் அதில்சென்ற 42பேரில் 30பேர் படுகாயமடைந்தனர். இவர்களில்பலர் சுயநினைவிழந்த நிலைமையிலும், 8பேர் கவலைக்கிடமான நிலைமையிலும் அம்பாந்தோட்டை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்கள். எஞ்ஜின்கோளாறு காரணமாகவே இந்தவிபத்து ஏற்பட்டதாகப் பொலிசார் சந்தேகிக்கிறார்கள்.

## புதிய ஓட்டுத்தொழிற்சாலை

ஒட்டுசுட்டானில் அமைக்கப்பட்டுள்ள பண்டாரவன்னியன் ஓட்டுத் தொழிற்சாலையைச் சென்ற 22ஆம் திகதியன்று கைத்தொழில்மந்திரி திரு. பிலிப் குணவர்த்தன திறந்துவைத்தார். அவ்வேளை அவர் பேசியபொழுது, இந்தத் தொழிற்சாலையில் செய்யப்படும் ஓடுகள் வடமாகாணத்தின் தேவையை ஓரளவில் பூர்த்திசெய்யும்; நவீன இயந்திரசாதனங்களைக்கொண்டு இதனை உங்கள் பகுதியில் தேசியஅரசாங்கம் அமைத்துத் தந்திருக்கிறது; சுதந்திரம்பெற்று இருபது வருடங்களாகியும் நாம்இன்னும் பொருளாதார சுதந்திரம் அடையவில்லை; சாதி,மத இனப்பாகுபாடின்றி நாம் ஒற்றுமையாகப் பொருளாதார சுபீட்சம்பெறப் பாடுபடவேண்டுமெனக் கூறினர்.

## பயங்கர பஸ்விபத்து

திருகோணமலையின் சரித்திரத்திலேயே இதுவரைநிகழாத பயங்கர பஸ்விபத்துஒன்று சென்ற 23ஆம்தேதி வியாழக்கிழமை காலை 11-45மணிக்கு நிகழ்ந்துள்ளது. அன்றுகாலை 5மணிக்குத் தொண்டமானுற்றிலிருந்து கொடிகாமம்வழியாகத் திருகோணமலைசென்ற பஸ்வண்டி அங்கு சந்திமடத்தடியிலுள்ள பாதுகாப்பற்ற புகையிரதக்கடவையிலே கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்த புகையிரதத்துடன் மோதுண்டு விபத்துக்குள்ளாயிற்று. அப்பொழுது அதில் குழந்தைகளும், பெண்களும் உட்பட 40பிரயாணிகள்வரை இருந்தார்கள். புகையிரதத்துடன் மோதியபஸ் கால்மைல் தூரம்வரை பாதையில் இழுத்துச் செல்லப்பட்டது. பஸ் நொருங்கித் துண்டுதுண்டாகச் சுழன்றுவிழுந்தது. பஸ்கண்டக்றரான ஏழாலையைச்சேர்ந்த சிவஞானசுந்தரமென்றவாலிபரும், வல்வெட்டித் துறையைச்சேர்ந்த 35வயதுடைய அன்னம்மாவும், தெரேசம்மாவும் விபத்துநிகழ்ந்த இடத்திலேயே உயிர்துறந்தனர். காயமடைந்த 24பிரயாணிகள் திருகோணமலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு அவர்களில்இருவர் கவலைக்கிடமானநிலையில் இருக்கின்றனர். காயமடைந்த 24பேரிலும் 7பேர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களாம். பஸ்சாரதியான குணபால பொலிஸ்பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றார்.

## ஜனநாயக ஆட்சிமுறை

இரத்தினபுரி மைதானத்திலே அந்நகரமேயர் திரு. ஆர். ஏ. திலகரத்தினவைப் பாராட்டுமுகமாகச் சென்ற திங்கட்கிழமை நடந்தேறிய பெரும் கூட்டமொன்றில் இராசாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன பேசுகையில், "உலகின் பலநாடுகளில் புரட்சியும், இரத்தக்களரியும் ஏற்பட்டுவருகின்றன; புரட்சிமூலம் ஏற்படும்ஆட்சி நிலைபெற்று நிற்பதில்லை; எமதுநோக்கம் முழுவதும் சமாதானமும், அமைதியுமேயாகும்; ஜனநாயகவழியைப் பின்பற்றி ஜனநாயகமுறையில் ஆட்சி செய்வதே எமதுஎண்ணம்; நாம ஜனநாயகத்தில் நம்பிக்கைகொண்டவர்கள்; எமதுகட்சியைவிட வேறெந்த ஒருகட்சியினலும் ஜனநாயகத்தை இந்நாட்டில் சிறப்பிக்கமுடியாது; ஆசியாவிலே ஜனநாயகத்தைக் கடைப்பிடிக்கும் நாடுகளில் இலங்கை முதன்மைவகிக்கிறது" எனக் கூறியிருக்கிறர்.

## தரக்குறைவான ஆபாசப் படங்கள்

வடமராட்சிப் பகுதியிலுள்ள சினிமாத்தியேற்றர்களிலே தரக்குறைவான ஆபாசத்திரைப்படங்கள் திரையிடப்படுவதைத் தடைசெய்யும் இயக்கம் ஒன்றை நடத்துவதென்றும், பிந்த இந்தஇயக்கத்தை நாடுமுழுவதும் விஸ்தரிப்பதென்றும் வடமராட்சி இலக்கியவட்டாரம் முடிவுசெய்திருக்கிறது.

## நெல்விளைவில் சாதனை

மின்னேரியைச்சேர்ந்த குரித்தலைக் கிராமத்தில் டி. ஆரோன்சிங்கஎன்ற விவசாயி சென்ற பெரும்போகத்தில் ஓர் ஏக்கர்வயலை மண்வெட்டிகொண்டு பண்படுத்தி எச்4எனும் நெல்லைவிதைத்து 180புசல்நெல் விளைவுகண்டிருக்கிறர்.

## நாயைக் குளிப்பாட்டிய சிறுவன்

வேலணைமேற்கைச் சேர்ந்த 8வயதுடைய நவராஜன், 7வயதுடைய நவஜீவம்எனும் சகோதரர் இருவரும் சென்ற ஞாயிற்றுக்கிழமை நாய்ஒன்றைக் குளிப்பாட்டுவதற்காக அங்குள்ள சங்கத்தார் குளத்துக்குச் சென்றனர். தம்பி குளத்திலே நாயைக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தபோது நாய் அவனைக் குளத்தின் ஆழமானபகுதிக்கு இழுத்துச்சென்றது. அதைக்கண்டு தமையன் அபயக்குரல் எழுப்பினுன். சிறிதுவேளையின்பின் நாய் நீந்திக்கொண்டிருந்தது. ஆனல், தம்பியைக் காணவில்லை. அவனைத்தேடித் தமையன் குளத்தினுள் பாய்ந்து சென்றவிடத்து இவனும்அதன் ஆழமான பகுதியில் இறங்கித் தத்தளித்தான். இவனது அபயக்குரல்கேட்டு அயலவர் ஓடிச்சென்று இவனைக் காப்பாற்றினர். ஆனல், தம்பியின் உயிரைக்காப்பாற்ற அவர்களால் முடியவில்லை.

## புதிய துறைமுகவேலை

காங்கேசன்துறையிலே அமைக்கப்பட்டுவரும் புதியதுறைமுகக் கட்டடவேலை வருகிறஆடிமாதம் பூர்த்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. அங்ஙனம் பூர்த்தியானதும் இன்னும் மேலதிக சாக்குக்கப்பல்களைக் காங்கேசன்துறைக்கு அனுப்பிவைக்க உணவுமந்திரி காரியாலயம் நடவடிக்கை எடுக்குமென்று யாழ்ப்பாண அரசாங்கஅதிபர் தெரிவித்திருக்கின்றர்.

## புதியநீதியரசர்

நீதியரசர் டக்றர் எச். டபிள்யு. தம்பையாஅவர்கள் தம்முடைய பதவிலிருந்து இளைப்பாறுவதைமுன்னிட்டு திரு. எஸ். ஆர். விஜயதிலகாஅவர்கள் புதியநீதியரசராக நியமனஞ்செய்யப்பட்டுச் சென்றசெவ்வாய்க்கிழமைகாலை சுப்பிறீம்கோட்டிலே பிரதமநீதியரசர் திரு. எச். என். ஜி. பெர்னுண்டோ அவர்கள்முன்பாகச் சத்தியப்பிரமாணம் செய்திருக்கின்றர்.

## பாடசாலைப் பிள்ளைகளின் வயல்வேலை

சென்றசித்திரை ஈறுகவுள்ள சுமார் ஏழுமாதங்களிலும் இலங்கைப் பாடசாலைப்பிள்ளைகளால் 20,370ஏக்கர் வயலிலே நாற்றுகள் நட்டுக் களைபிடுங்கப்பட்டிருப்பதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது. பத்திரிகைஒன்று ஒழுங்குசெய்த அகில இலங்கைப் பாடசாலைகளின் உணவுப்பொருள்செய்கை இயக்கத்தின்கீழ் இந்தநடவடிக்கை எடுக்கப்படலாயிற்று.

## அரிசி இறக்குமதி

உள்நாட்டு ஊர்அரிசி பெருமளவில் அதிகரித்திருப்பதாலே இவ்வருட அரிசிஇறக்குமதி 2லட்சத்து 50ஆயிரம்தொன்னல் குறைக்கப்படவிருக்கிறது. அரசாங்கம் இவ்வருடம் 3லட்சத்துப் 10ஆயிரம்தொன் அரிசியை இறக்குமதிசெய்ய ஒழுங்குசெய்திருந்தது. ஆனல் இம்முறை காலபோக விளைவின்மூலம் 4கோடியே 5லட்சம் புசல்நெல் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது முந்தியமதிப்பின்படி 3 கோடியே 60லட்சம்புசல் நெல்தான் கிடைக்குமென எதிர்பார்க்கப்பட்டது. கூப்பனுக்கு அரசாங்கத்துக்கு வருடம் ஒன்றுக்குத் தேவைப்படும்அரிசி 5லட்சத்து 20ஆயிரம்தொன். இத்தொகையில் அரைவாசியும் உள்நாட்டு ஊர் அரிசிகொண்டு சமாளிக்கப்படும்.

# உள்நாட்டுச் செய்திகள்

## இரத்தத் தட்டுப்பாடு

யாழ்ப்பாண அரசினர் பெரியஆஸ்பத்திரி இரத்தவங்கியில் இரத்தத்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது. அதனல் இரத்தவங்கி அதிகாரிகள் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகள் பலவற்றிற்கும்சென்று இரத்தம்சேகரிக்கத் தொடங்கியிருக்கிறர்கள்.

## இராவண வம்சத்து வேடர் தலைவர்

மையங்கனை விந்தனைக்காட்டில் வசித்திருந்த வேடுவத்தலைவர் தம்பண்ணை பொறந்த தனது 80ஆம்வயதிலே காலஞ்சென்றுவிட்டார். 80வயது கண்டவராயிருந்தும் பராக்கிரமசாலியாய் இருந்தார். தன்னை இராவணன் வம்சத்தவரென்று இவர் சொல்லிவந்தார். இலங்கையின் முன்னுள் பிரதமர் திரு. டி. எஸ். சேனநாயக்காவுடனும், இப்போதையபிரதமர் திரு. டட்லி சேனநாயகவுடனும் இவர் நெருங்கிப் பழகியவர். இவருக்கு 7மனைவியரும், 32 பிள்ளைகளும் இருக்கிறர்கள். பௌத்த ஆசாரப்படியே இவருக்கு அந்திமகிரியைகள் நடைபெற்றன.

## ஜி. சி. ஈ. பரீட்சைக் கட்டணம்

இவ்வருடமுதல் ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கான பிரவேசகட்டணம் 25ரூபாயிலிருந்து 30ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் தோற்றும் முதற்பாடத்திற்குப் 10ரூபாவும், அதற்கு மேற்படும் ஒவ்வொரு பாடத்திற்கும் 5ரூபாவும், 4பாடங்களுக்கு 25ரூபாவும், 5பாடங்களுக்கும், அதற்கு மேற்படும் முழுப்பாடங்களுக்கும் 30 ரூபாவும் கட்டணமாகச் செலுத்தப்படவேண்டும்.

## இந்திய எருமைகள், ஆடுகள்

கொழும்புத் துறைமுகம் வந்துள்ள கப்பல் ஒன்றிலிருந்து 100இந்திய எருமைகளும், 1,050வெள்ளாடுகளும், 1,050செம்மறியாடுகளும் இறக்குமதி செய்யப் பட்டிருக்கின்றன. இலங்கையிலே எருமைகள், ஆடுகளைப் பெருக்குவதற்காகப் பாலபண்ணைகளுக்கு இவைகள் அனுப்பிவைக்கப்படும்.

## சத்துக்குறைந்த பால்மா

26சதவிகிதத்துக்குக் குறைவான கொழுப்புச்சத்துள்ள பால்மாரின்களை மட்டுமே இந்தஆனிமாதத்திலிருந்து இறக்குமதி செய்வதென்று அரசாங்கம் முடிவுசெய்திருக்கிறது. அதனல் 26 சதவிகிதமுதல் 28சதவிகிதம்வரை கொழுப்புச்சத்து தேவைப்படும் ஒன்றரை இரண்டுவயதுக் குழந்தைகள் பாதிக்கப்படுமென்று குழந்தை வைத்திய நிபுணர்கள் கருதுகினறர்கள். 26 சதவிதத்திற்குக் குறைவான கொழுப்புச்சத்துள்ள பால்மா சிசுக்களுக்கு மட்டும் ஏற்றதென்றும், ஏனையவர்களுக்கு 26முதல்28சதவிகித கொழுப்புச்சத்துள்ள பால்மா அவசியமென்றும் சொல்லப்படுகிறது.

## சீமேந்துத் தட்டுப்பாடு

நாட்டில் ஏற்பட்டுள்ள சீமேந்துத் தட்டுப்பாடு இந்தஆனிமாதத்தில் நீங்கிவிடுமென எர்பார்க்கப்படுகிறது. ரூஷியாமுதலாம் பிறநாடுகளிலிருந்து போதியசீமேந்து இறக்குமதியாகவிருப்பதும், காங்கேசன்துறைச் சீமேந்துத்தொழிற்சாலை முன்போல இயங்கத்தொடங்கியிருப்பதுமே இதற்குக்காரணமாகும்.

## வெளியேறும் முத்துச் சிப்பிகள்

சிலாபம், மன்னர்ப்பகுதிக் கடல்களிலே முத்துச்சிப்பிகள் கரைகளைவிட்டு யாழ்ப்பாணத்திற்கும், அருகாலமையிலுள்ள தீவுகளுக்கும், புத்தளம், நீர்கொழும்புப் பகுதிகளுக்கும் சென்றுகொண்டிருப்பதாகக் கடற்தொழில் பகுதி பரிசீலனைமூலம் கண்டறிந்திருக்கிறது. சிலாபம், மன்னர்ப் பகுதிகளிலே அலைகளின் இரைச்சல் அதிகரித்துவருவதினலும், இயந்திரப்படகுகளின் நடமாட்டத்தினலும் முத்துச்சிப்பிகள் அங்கிருந்து வெளிகொண்டு அமைதியான இடங்களைத் தேடிச்செல்கின்றனவாம். ஆயினும் இதனல் முத்துக்குளிப்புப் பாதிக்கப்பட மாட்டாதென்றும், குளிகாரர் இனிமேல் தூரமான இடங்களுக்குச்சென்றே சிப்பிகளைக் குளிக்க வேண்டுமென்றும் சொல்லப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

### ஆனி — 1968

| | | | |
|---|---|---|---|
| 2 | ஞா. | பரிசுத்தஆவி. விழா | [சி] |
| 3 | தி. | பரிசுத்தஆவி விழாவின் எண்கிழமையில்வரும் திங். | [சி] |
| 4 | செ. | பரிசுத்தஆவி விழாவின் எண்கிழமையில்வரும் செ. | [சி] |
| 5 | பு. | பரிசுத்தஆவி விழாவின் பின்வரும் நோன்புப் புதன் | சி |
| 6 | வி. | பரிசுத்தஆவி விழாவின் எண்கிழமையில்வரும் வியா. | சி |
| 7 | வெ. | பரிசுத்தஆவி விழாவின் பின்வரும் நோன்பு வெள். | [சி] |
| 8 | ச. | பரிசுத்தஆவி விழாவின் பின்வரும் நோன்பு சனி | [சி] |

சத்தியவேத
பாதுகாவலன்

1968-ம்ஆண்டு ஆனி மீ 1-ந்உ

## மாகாண சங்கம்

இன்று இலங்கைவாழ் கத்தோலிக்க மக்கள் அனைவரது நாவிலும் மாகாணசங்கம் என்னும் சொல்லே முதலிடம் பெறுகின்றது. அனைவர் கண்களும் இன்று அச்சங்கத்தையே எதிர்நோக்கிய வண்ணம் இருக்கின்றன. அதற்குக் காரணம் இல்லாமலில்லை. இது இந்நாட்டுக் கத்தோலிக்க மக்களுக்கு மட்டுமன்றி, அனைவருக்கும் முக்கியமான ஒரு நிகழ்ச்சியாகும். ஒவ்வொருவரும் இச்சங்கத்தின் முடிவுகள் தம்மை எப்படிப் பாதிக்கப் போகின்றன என பரபரப்புடன் காத்திருக்கின்றனர்.

மாகாண சங்கமொன்று ஏன் அவசியமாயிற்றென்பதை நாம் அறிவோம். வத்திக்கான் சங்கத் தீர்மானங்கள் கத்தோலிக்க உலகில் மாற்றங்களையும், மறுமலர்ச்சியையும் ஏற்படுத்திவிட்டன. அதன் பயனாக ஏற்பட்ட விளைவுகளை இன்று எம் ஆலயங்களிலும், மடாலயங்களிலும், சமூகச் சூழலிலும் கண்கூடாகக் காண்கின்றோம். ஆனால், திருச்சபையோ மிகப் பரந்தது. பல்வேறு இனத்தவர், பல்வேறு நாட்டினர், பல்வேறு மொழியினரைத் தன்னுள் அடக்கியது. தம்முள் மாறுபட்ட பண்பாடு, பழக்கவழக்கங்கள், சமூகச் சூழல்களையுடைய இவர்கள் யாவருக்கும் ஒரே சீரான ஓர் அமைப்பை ஏற்படுத்துவது அசாத்தியமாகையால் அவ்வவர்கள் நாட்டிற்கும், சூழலுக்கும் ஏற்றபடி திருச்சபை தன்னை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

வத்திக்கான் சங்கத் தீர்மானங்களை, நடைமுறைக்குக் கொண்டு வரும்பொழுது இலங்கையின் சூழ்நிலையில் அவற்றை எவ்விதம் செயல்படுத்தலாம் என்பதை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்து அதிகாரத்துடன் முடிவு செய்யக் கூடிய ஒரு குழு தேவைப்பட்டது. அத்துடன் இம்முடிவுகள் அனைத்திலங்கைக்கும் ஒத்தனவாயும், மேற்றிராணிமார், குருமார், விசுவாசிகள் ஆகியோரின் விருப்பத்திற்கியைந்தனவாயும் இருத்தலே சிறந்தது. இந்த அடிப்படையைக் கொண்டே எழுந்தது இம்மாகாண சங்கப் பேரவை.

மேற்றிராணிமாரையும், குருமார், துறவியர், துறவினிகள், பொது நிலையினர் ஆகியோருள் பொறுக்கியெடுக்கப்பட்ட பிரதிநிதிகளையும் கொண்ட இப்பேரவை தம் அறிவிற்கெட்டிய வரை பல. விஷயங்களையும் அலசி ஆராய்ந்தாலும் அவர்களுக்கு ஞானவெளிச்சத்தைக் கொடுத்து, இனிச் செல்ல வேண்டிய வழியை அவர்களுக்குக் காட்டப்போகிறவர் தூய ஆவியானவரே. தூய ஆவியானவர் இப்பேரவையின்மேல் நிழலிட்டு, இலங்கை மக்களுக்கும், கத்தோலிக்க திருச்சபைக்கும் நன்மை பயக்கக்கூடிய தீர்மானங்களை நிறைவேற்ற அவர்களுக்குத் துணைபுரிந்து வழிநடத்துவாராக. இப்பெரும் கொடையை அருளும்படி நாம் தினந்தோறும் அவரை மன்றாடி வருவோமாக.

## கம்யூனிஸ்தநாட்டின் சமய எழுச்சி

கம்யூனிஸ்த ஆட்சியின்கீழ் இருந்துவருகின்ற கிழக்குஐரோப்பிய நாடுகளில்ஒன்றான செக்கோசிலவக்கியாவின் அரசியல் மாற்றமானது சோவியற்ருஷியாவுக்குப் பெரும் அதிர்ச்சியையும், ஜனநாயக நாடுகளிலெல்லாம் பெரிதும் ஆச்சரியத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. இந்தநாடு ஒருகத்தோலிக்க நாடு. சமயவிஷயமாய் போலாந்து, ஹங்கேரிபோன்று கடந்த 20 ஆண்டுகளாக இம்சிக்கவும், துன்புறுத்தலும் பட்டுவந்தநாடு. ஆனால், இப்பொழுது …

அங்குள்ள ஒவ்வொருமேற்றிராசனமும் சம்பந்தப்பட்ட சமயகருமங்களைக் கண்டிப்பாகக் கட்டுப்படுத்திவந்த கம்யூனிஸ்தஅதிகாரிகள் அகற்றப்பட்டு விட்டார்கள். குருமடங்களிலுள்ள மாணவர்களின் தொகை இனிமேல் கட்டுப்படுத்தப் பட மாட்டாது. கத்தோலிக்க அச்சகங்களைக் கட்டுப்படுத்துவது நிறுத்தப்பட்டுவிட்டது. சாதாரண கத்தோலிக்கர் திரும்பவும் பொதுக் கூட்டங்கள் நடத்தலாம். கத்தோலிக்கசேவையைத் திரும்பவும் நடத்துதற்கான திட்டங்கள் செய்யப்பட்டுவருகின்றன.

தற்போது ரோமைநகரில் சஞ்சரித்துவருகின்ற கருதினல் பீறன் ஆண்டகை பிறேக்நகருக்குத் திரும்புவதுட்பட அங்குள்ள மேற்றிராணிமார் தங்கள்மேற்றிராசனங்களுக்குத் திரும்பச்செல்வதற்கான சமரசப் பேச்சுகள் நடைபெற்று வருகின்றன. அந்நாட்டிலே பன்னிருமேற்றிராசனங்கள் இருக்கின்றன. அவற்றில்நான்கு அப்போஸ்தலிக்கு பரிபாலனர்களாலும், எஞ்சியுள்ள எட்டும் விக்கார் கப்பியூலேற்றர்களாலும் பரிபாலிக்கப்படுகின்றன. இன்னும் சிறைவாசஞ்செய்கின்ற 16குருமாரையும் விடுதலைசெய்வதற்கான பேச்சுகள் நடைபெறுகின்றன.

## கத்தோலிக்க உலக அச்சக மகாநாடு

இவ் வருடம் ஆடி மாதம் ஜேர்மனி தேசத்தில் பேர்ளின் நகரத்தில் அகில கத்தோலிக்க உலக அச்சக மகாநாடு 1-ம் திகதி தொடக்கம் 5-ம் திகதி வரையும் நடைபெறஇருப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. மாற்றங்கள் ஏற்பட்டுவரும் உலகில் கத்தோலிக்க பிரசுர வேலைத்தலங்கள் எவ்வாறு கடமையாற்றவேண்டுமென்பதே வற்புறுத்தப்படும் கருமமாக இருக்கும். உலகில் பெயர் பெற்ற இல்லற கத்தோலிக்க அறிஞர்களும் பிறரும் சொற்பொழிவாற்றக் கேட்கப்பட்டிருக்கின்றனர்.

## நம் மேற்றிராணியாரின் கடிதம்

மேற்றிராசன இல்லம்,
யாழ்ப்பாணம், 27–5–68.

கிறிஸ்துவில் அன்பார்ந்த பிள்ளைகளே,

நாம் காத்திருந்த நாளும் கடுகி வருகின்றது; இலங்கை மாகாண சங்கம் ஆனி 2-ம் தேதி கூடுகின்றது. ஆனி 2-ம் தேதியிலிருந்து 10-ம் தேதிவரை நாம் எல்லோரும் கிறிஸ்துவின் அன்பு, சத்தியம் ஆகியவற்றின் ஒளியில் எமது வாழ்வையும், பழக்கங்களையும் ஆராய்ந்துகொண்டிருப்போம். தேவ திருவுளத்தை நிறைவேற்றும் பொருட்டு, தேவைப்படும் மாற்றங்களை ஏற்று, அவற்றைச் செயல்படுத்தத் தேவன் எமக்குச் சக்தியும், ஒளியும் தந்தருள வேண்டுமெனப் பிரார்த்திப்பது எமது கடமையாகும். ஆகவே, இக்கருத்துக்காக மேற்றிராசனத்தில் ஒன்றுகூடிப் பிரார்த்திப்போம்:

*(1)* ஆனி 2-ம் தேதியிலிருந்து 10-ம் தேதி வரை, பூசைப்பலியின்போது "தூய ஆவியே எழுந்தருளி வாரும்" என்னும் தொடர் பாடப்படும்; அல்லது செபிக்கப்படும்.

*(2)* 2-ம் தேதியிலிருந்து, 10-ம் தேதி வரை, கூடுமானவரையில் விசாரணைப் பங்குகளிலும், சகல மடாலயங்களிலும் திருமணித்தியாலம் நடைபெறும்.

*(3)* இந்தப் பத்துநாட்களைச் செபத்தில் மட்டுமன்றி, ஒறுத்தலிலும் செலவிடுவோம். அத்தியாவசியமற்ற செலவுகள் சிலவற்றைக் குறைப்பதனால் மிஞ்சும் பணத்தைச் சேர்த்து இலங்கையின் எப்பாகத்திலாயினும், அவசியமான இடத்தில் ஒரு வீடமைப்புத் திட்டம் ஆரம்பிப்பதற்காக ஒரு மத்திய நிதிக்கு அனுப்பி வைக்க வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளது. இச்சேமிப்புகள் யாவும் தொடர்ந்துவரும் ஞாயிற்றுக்கிழமையன்று சேர்க்கப்பட்டு, பங்குக் குருவரிடம் கொடுக்கப்படும். அவர் அதை மேற்றிராசன பிரதம நிதிப் பொறுப்பாளக் குரவருக்கு அனுப்பி வைப்பார்.

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

இங்ஙனம்,
கிறிஸ்துநாதரிலும், மரியன்னையிலும், உங்கள் அன்புள்ள,
+ ஜே. எமிலியானுஸ்பிள்ளை, O.M.I.,
யாழ்-மேற்றிராணியார்:

* * *

## மாகாணசங்க அங்கத்தினரின் செபம்

தூய ஆவியானவரே! எமது கணக்கற்ற பாவங்களை உணர்ந்தவர்களாய், ஆனால் உமது திருநாமத்தில் ஒரு விசேஷ விதத்தில் ஐக்கியப்படுத்தப் பட்டவர்களாய் உமது திருச் சமுகத்தில் நிற்கின்றோம். எம்மோடுவந்து வாழ்வீராக; எமது உள்ளங்களை ஊடுருவுவீராக.

எமது செயல்களின் வழிகாட்டியாக இருந்து, நாம் செல்ல வேண்டிய வழியை எமக்குக் காட்டுவீராக. உமது துணையோடு நாம் செய்யும்வேலை எல்லாவிதத்திலும் உமக்குப் பிரியமானதாயிருக்கும்படிக்கு நாம் செய்யவேண்டியனவற்றை எமக்கு உணர்த்துவீராக.

நீரே எம்மை ஏவுகிறவராயும், எமது கருத்துக்களை மேற்பார்வை செய்கிறவராயும் இருந்தருளுவீராக. ஏனெனில், பிதாவோடும் சுதனோடும் மகிமைபெற்றதோர் நாமத்தை நீர்மாத்திரம் உடையவராயிருக்கிறீர்.

அளவற்ற நீதிக்கடலாகிய நீர், நாம் நீதியைக் குலைக்காதவாறு காப்பீராக. எமது அறியாமை எம்மைத் தீயவழியில் இட்டுச் செல்லாமலும், இச்சகம் எம்மை அசைக்காமலும், ஒழுக்க அல்லது உலோகாயத ஆர்வம் எம்மைக் கெடுக்காமலும் இருக்கச் செய்வீராக. எமது உள்ளங்களை உம்மோடுமட்டும் உறுதியாக இணைத்தருளும். உமது திருவருளின் கொடையால் நாம் உம்மோடு ஒன்றித்து, சத்தியத்திலிருந்து அற்பமேனும் விலகாதிருப்போமாக.

இன்றும் என்றும் எமது தீர்மானங்கள் உமக்குப் புறம்பாய் இல்லாதபடிக்கும், நித்தியத்தில் எமது செயல்களுக்கு முடிவில்லாத வெகுமதியைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டும், உமது திருநாமத்தில் ஒன்றித்து, சகல செயல்களிலும் உமது இரக்கம், நீதி ஆகியவற்றைப் பின்பற்றி நடப்போமாக. ஆமென்.

## ரோமாபுரியில் ஞாயிறு பூசைப்பலிக் கடமையைச் சனிக்கிழமைகளில் செய்யலாம்

உலகத்தின் சகல பாகங்களிலுமுள்ள கத்தோலிக்க மக்கள் இதுகாலவரையும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் கடன் திருநாட்களிலும் பூசைப்பலியில் கட்டாயமாகப் பங்கு பெறக் கடமைப்பட்டிருந்தனர்: ஆனால் இக் கடமையை அனுசரிப்பதில் ரோமாபுரி மேற்றிராசனத்தில் 6-வது சின்னப்ப பாப்பரசர் தாமே அப்பகுதி மேற்றிராணியாராக ஒரு இளக்காரம் செய்திருக்கிறார். அது என்னவெனில் இனிவருங் காலங்களில் வருகிற மாதந் தொடக்கமாக, கோடை காலத்தில் வார இறுதியில் தம் வாசஸ்தலத்தை விட்டுப் பிற இடங்களுக்குச்செல்ல இருப்பவர்கள் [illegible] காணக் கடமைப்பட்ட அப் பலியை சனிக்கிழமை பின்னேரம் கண்டு ஒப்புக்கொடுக்கலாமென்பதே. இதை விளக்குகையில் ரோமாபுரியில் பாப்பரசரின் பதிலாகத் தொண்டுசெய்யும் கருதினல் டெலாக்குவே அடிகளார், இந்த இளக்காரம் வார இறுதியைக் கழிக்கவெனச் செல்லும் மக்களுக்கு அவ் வார இறுதியில் கடவுளை மறந்துவிட உதவியாகவல்ல, ஆனால் அதைப் புனிதப்படுத்த உதவவே பாப்பரசர் இக் கருணை செய்திருக்கிறாரென்றார். இவ்வாறு சந்தர்ப்பங்களுக்குத் தக்க மாற்றங்கள் செய்ய வத்திக்கான் சங்கம் பிரதேச மேற்றிராணிமாருக்கு அனுமதி அளித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெந்தக்கோஸ்து என்னும் இஸ்பிரீத்துசாந்து திருநாள் — பி. சவரிமுத்து

பூலோகத்தில் வாழும் கிறீஸ்தவர்கள் கொண்டாடும் மிகவும் மங்களகரமான ஒரு திருநாள் இது. இன்றுதான் பரலோக இராச்சியம் என்னும் தேவ இராச்சியம் என்று எமது கர்த்தாவாகிய யேசுக்கிறிஸ்துநாதர் அடிக்கடி சொல்லிவந்த திருச்சபை ஒரு சில அங்கங்களோடு ஆரம்பமாயிற்று எனலாம்.

எமது இரட்சகரின் இறப்பின்காரணமாகத் திகில் அடைந்து, மனத் தைரியமற்றவர்களாய், தங்களைக் கிறிஸ்துநாதரின் சீஷர்களாக வெளிப்படுத்த அச்சப்பட்டிருந்த அப்போஸ்தலர்கள் அனைவரும் ஆண்டவரின் உயிர்ப்பின்பின் ஓரளவுக்கு உற்சாகமுடையவர்களாகக் காட்சியளித்தார்கள். என்றாலும் எமது ஆண்டவரின் விண்ணேற்றத்துக்குப்பின் பயங்கொள்ளிகளாய் ஒரு மேல்வீட்டில் ஏறி, எல்லோரும் ஸ்திரிகளோடும், யேசுநாதருடைய தாயாராகிய மரியம்மாளோடும், அவருடைய சகோதரரோடும் ஒரேமனமாய் ஜெபத்தில் நிலைத்திருந்தார்கள் (அப். நட. அதி. 1; வச. 14).

## அவரின் கொடைகளும் எமது வாழ்க்கையும்

எமது ஆண்டவர் தமது சீஷர்களைப் பார்த்து, "நான் போவது உங்களுக்கு நலமாயிருக்கின்றது; ஏனெனில், நான் போகாதிருந்தால், தேற்றுகிறவர் உங்களிடத்தில் வரார்; நான் போவேனாகில் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன்; அவர் வந்து பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத் தீர்ப்பைக்குறித்தும் உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்" (அரு.16:7-8). அதாவது, கிறிஸ்துநாதரை விசுவசியாமல் போனது பாவம் என்றும், அவர் அடைந்த பரலோக மகிமையினால் யூதர் அவரைக் கொலைக்கு அளித்தது அநீதியென்றும், கிறிஸ்துநாதரின் வெற்றியினால் பசாசு தன் அரசையிழந்து தீர்வைக்குள்ளாயிற்றென்றும் இஸ்பிரீத்துசாந்துவானவர் உலகத்துக்கு அறியப்பண்ணுவார் என்பதாம்.

எனவே, எமது மூவித கடமைகள் வெளியாகின்றன. முதலாவது, நாம் யேசுநாதர் சுவாமி எமக்குப் படிப்பித்த சத்தியங்களையும், அவர்போல் திருச்சபை வெளிப்படுத்தும் உண்மைகளையும் விசுவசித்தலும், அவற்றை ஏனைய மக்களிடையே பரப்பிப் பரமதேவனின் இராச்சியத்தைப் பரவப் பண்ணுதலும். இவற்றுள் எமது இரட்சணியமும், பிறருடைய இரட்சணியமும் அடங்கும். இம் முயற்சிகள் இறைஅன்பாலும், பிறர் அன்பாலும் நிரம்பிய எல்லோர் மனதிலும் இடம்பெறும்.

இரண்டாவதாக, நாம் ஒவ்வொருவரும் திருமறையையோ, அன்றேல் திருச்சபையையோ கண்டித்துப்பேசி, எமது திருமீட்பரை மீண்டும் கொலைக்குள்ளாக்காமல் நாம் ஒரு புண்ணிய வாழ்வு வாழவேண்டும்.

மூன்றாவதாக, உலகம் சரீரம் பசாசு என்ற எமது ஆத்மீக சத்துருக்களை நாம் ஜெயித்து, எமது திருமீட்பரின் அரசை இப்பூவுலகில் நிலைநாட்ட நம்மாலாவன செய்ய நாம் முயலவேண்டும், இக்கடமைகளை நாம் அனுதினமும் சமுத்திரையாய்ச் செய்வதற்கு இஸ்பிரீத்துசாந்து சர்வேசுரனின் அருளை வேண்டி நாம் மன்றாடவேண்டும். இதற்கு, "இஸ்பிரீத்துசாந்துவே! தேவரீர் எழுந்தருளி வாரும்; உம்முடைய விசுவாசிகளின் இருதயங்களை நிரப்பி, உமது நேசத்தின் அக்கினியை அவைகளிற் பற்றியெரியச் செய்தருளும் …" என்ற செபம் மிகவும் பலனையளிக்கும் ஒரு செபமன்றோ.



## இஸ்பிரீத்துசாந்துவின் வருகை

அப்போது பெந்தக்கோஸ்து என்னும் நாட்கள் முடிவாகையில் அவர்கள் எல்லோரும் ஒரே இடத்தில் ஒருமித்திருக்கையில் பலத்த காற்றடித்தாற்போல, திடீரென வானத்தினின்று ஒரு முழக்கமுண்டாகி அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுமையும் நிரப்பிற்று. அல்லாமலும், அக்கினிமயம் போன்ற பிரிந்த நாவுகள் அவர்களுக்குத் தோன்றி அவர்களில் ஒவ்வொருவர்மேலும் வந்து தங்கினது. அவர்கள் எல்லோரும் இஸ்பிரீத்துசாந்துவினால் நிரப்பப்பட்டு, பேசும்படிக்கு இஸ்பிரீத்துசாந்துவானவர் அவர்களுக்குக் கொடுத்த வரத்தின்படியே பற்பல பாஷைகளில் பேசத்தொடங்கினார்கள். (அப். நட. அதி. 2; வச 1-4).

## இஸ்பிரீத்துசாந்துவானவர் —அன்றும் இன்றும்

அங்கிருந்தவர்கள் எல்லோரும் செபத்திலே ஒருமனமாயிருந்தார்கள் என்றதும், அர்ச். பேதுருவானவர் அந்தத் திருக்கூட்டத்துக்குத் தலைவராய் அமர்ந்திருந்தார் என்றதும், தேவதாயார் அவர்களுடன் இருந்தார் என்றதும் கவனிக்கத்தக்கவைகள். இப்படியே கத்தோலிக்க திருச்சபையானது எப்போதும் ஒன்றாய் அர்ச். பேதுருவின் ஸ்தானத்தினால் ஆளப்படுவதாய், பரலோக இராக்கினியின் அடைக்கலத்திலே நடைபெறுவதாய் இன்றும் இருக்கிறது என்பது குறிப்பிடத் தக்கது. எவ்வாறு இஸ்பிரீத்துசாந்து தமது வரப்பிரசாதத்தினால் ஆதித் திருச்சபையின் மக்களை நிரப்பினாரோ, அவ்வாறே இன்றும் ஞானஸ்நானத்திலேயும், விசேஷமாய் உறுதிப்பூசுதலிலேயும் தமது வரப்பிரசாதங்களால் மக்களின் ஆத்துமங்களை நிரப்புகிறார். அவர் எமக்கு அளிக்கும் கொடைகள் ஞானம், புத்தி, அறிவு, விமரிசை, திடம், பத்தி, தேவபயம் என்று கிறீஸ்தவர்கள் சகலரும் நன்கறிவர்.

## ஆசிரியகலாசாலைப் பிரவேசப்பரீட்சை

ஆசிரியகலாசாலை விசேடபயிற்சிக்கான பிரவேசப்பரீட்சை வருகிற ஆவணிமாதம் 26ஆம்திகதி நடைபெறவிருக்கிறது. இப்பரீட்சைக்கான விண்ணப்ப பத்திரங்கள் ஆனி16ஆம் திகதிக்குமுன் பரீட்சாதிகாரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டியன.

## இரட்சகரின் திருஇரத்த மகாசேத்திரம்

பெல்ஜியத்திலே புறூஜெஸ்நகரம் பிரசித்திபெற்ற ஒருயாத்திரைத்தலமாகும். 1149ஆம்ஆண்டு ஜெருசலேம்நகரின் பத்திறியாக்கு ஆண்டகையால் பிளான்டேர்ஸின் கவுண்ட் பிரபுவான றியெறிஎனப்பெயரிய சிலுவைப்படை வீரருக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட இரட்சகரின் திருஇரத்தத்தைக்கொண்ட பசிலிக்காஎனப்படும் மகாதேவாலயம் இங்குதான் இருக்கின்றது. திருச்சிலுவையடியிலே அரிமத்தியாவின் சூசையப்பராலும், நிக்கொதேமுசாலும் சேகரிக்கப்பட்டதெனப் பாரம்பரியம் நிலைநாட்டுகின்ற இரட்சகரின் திருஇரத்தத்தை விசேடவிதமாக வணங்கிப் பக்திபண்ணுவதற்கென அங்கு வருடந்தோறும் வைகாசிமாதத்தில் மாபெரும் ஊர்வலம்ஒன்று நடைபெறுகின்றது.

உலகின் மகாப்பெரிய ஊர்வலங்களில் ஒன்றாகிய இதில் கலந்துகொள்ளுமாறு 7,50,000கார்கள், பஸ்களில் சனசமுத்திரம்போலச் சென்று திரளுகின்ற 20,00,000யாத்திரிகர்களை வரிசையாக அமைந்துள்ள ஆலயமணிகள் இன்பநாதஞ் செய்து ஆர்ப்பரித்து வரவேற்க, அப்பொழுது புறூஜெஸ்நகரம் மத்தியகால ஆடம்பரபெருமையுடன் அலங்காரகோலம்பூண்டு காட்சியளிக்கின்றது.

பலவர்ணத் துவசங்களின் கோலாகலமும், சங்கீதங்களின் இன்னிசையும், மற்றும் பலவாறான ஆடம்பரங்களும் மனிதவர்க்கத்தின் சரிதை முழுவதையும் அப்பொழுது அந்நகர் பிரதிபலித்து ஹொலிவூட்டிக்குமே இணையற்றதாய் விளங்குகின்றது. அருள்பெற்ற மனிதனையும், பாவஞ் செய்த மனிதனையும், திருஇரத்தத்தினால் இரட்சிக்கப்பட்ட மனிதனையும் அது வர்ணித்துக்காட்டுகின்றது. 1150 ஆம் ஆண்டு புறுஜெஸ்நகருக்குச் சிறுகண்ணாடிக் குப்பியொன்றிலே ஒரு வெண்பரிமீது கவுண்ட் றியெறிபிரபுவால் கொண்டுவரப்பெற்ற திருஇரத்தத்தைக்கொண்டுள்ள அபூர்வ வேலைப்பாடமைந்த தங்கச்சிமிழைத் தன்னகத்தில் கொண்டிருப்பதே புறூஜெஸ்நகரின் பெருமைக்கெல்லாம் காரணம்.

## ஒரு சிக்கலான கேள்வி

இருதய மாற்றம், மறு அங்க மாற்றங்கள் நடாத்தப்படும் இந்நாட்களில் "எப்போது மரணம் ஏற்படுகின்றது" என்ற கேள்வி மிகவும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றது. இதுபற்றி ஆலோசித்த வேதபாரகர் ஆராய்வுக்குழு, இது வைத்தியர்களே ஆராய வேண்டிய பிரச்சனையேயன்றி வேதபாரகர்களுக்குரிய பிரச்சினையன்று என முடிவுசெய்துவிட்டனர். இதுகால வரையும் மரணமென்றால் இருதயம் தானாகவே இயங்கும் தன்மை நிற்கும்போது மரணம் ஏற்படுகின்றது என ஒத்துக்கொள்ளப் பட்டது, ஆனால் நின்ற இருதயம் பின்பு துடிப்புப் பெறக் கூடியதாய் இன்று இருப்பதால் மேற்கூறப்பட்ட விளக்கம் இன்று பெருது என்பது வெளிப்படையே.

## மலேரியா சிகிச்சைக்கு அமெரிக்க கத்தோலிக்கரின் உதவி

மீளவும் இலங்கையில் மலேரியாக் காய்ச்சல் தலைகாட்டியிருக்கிறதெனக் கேள்விப்பட்ட மேல்நாட்டு ஸ்தாபனங்கள் தம்மால் கூடிய உதவி செய்து இக் கொடிய நோயை அடக்கியாள முன்வருகின்றன: அமெரிக்க கத்தோலிக்கர் கருதினால் கூறேயின் மூலமாக இச் சிகிச்சைக்குத் தேவைப்படுகிற மருந்துவகைகள் பல அனுப்பியிருந்தனர். சென்ற வாரம் சுகாதாரமந்திரி திரு. ஈ எல். சேனநாயகா அவர்கள் கருதினாலின் இல்லத்துக்குச் சென்று இந்த அன்பளிப்பைப் பெற்றுக் கொண்டார்.

## "எனது நாட்டுக்குச் செல்ல விரும்புகிறேன்"

—கருதினால் பெறன்

செக்கோ சிலாவாக்கிய தேச கருதினால் பெறன் அவர்கள் இன்று றோமாபுரியில் வாழ்ந்து வருகின்றார். அவரது நாட்டிலுள்ள கொமியூனிஸ்த அரசாங்கம் இன்று சனநாயக முறைகளில் ஓரளவு ஒழுகிவருவதனால் கருதினாலவர்களுக்கு தன்நாடு திரும்ப சந்தர்ப்பம் வருமென எதிர்பார்க்கப்படுகின்றது. கருதினாலவர்களும் தருணத்தை ஆவலோடு எதிர்பார்க்கின்றார். "எனது நாட்டுக்கு நான் திரும்புவதானால், எனது ஆன்ம அலுவலையும் என் கடமைகளையும் முன்போல் பார்த்துவரச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். அப்படிச் செய்வதாக எமக்கு உறுதி கூறப்பட்டிருக்கின்றது" என்றார் கருதினாலவர்கள்.

## வீரத்துவ குருவானவர்

உலகயுத்தங்கள் இரண்டிலும் தமதுவீரத்துவ செயல்களையிட்டுப் யுத்தசிலுவைவிருது ஈட்டியவரும், பிரான்ஸ்தேசத்தை ஜேர்மனியர் ஆக்கிரமித்தபின் பிரான்சிய எதிர்ப்பியக்கத்தில் ஒரு வீரர் திலகமாக விளங்கியவருமான கனன் பீலிக்ஸ் கேர்சுவாமிகள் தமது92ஆம்வயதில் தாம்மேயராக இருந்துவந்த டிஜொன்நகரில் காலமாயினர். அப்போது பிறநாடுகளின் அரசாங்கங்களும் இவருக்கு மகிமைவரிசைகள் அளித்தன. இவற்றில் பிரித்தானி ஓ. பி. ஈ. எனும் வரிசை வழங்கலாயிற்று.

1940 ஆம்ஆண்டு ஜேர்மனியர் டிஜொன்நகருள் பிரவேசித்தபோது இவர் கத்தோலிக்க பத்திரிகையை ஆசிரியராயிருந்து நடத்திவந்தார், ஜேர்மனியருக்கு விரோதமான தமது கட்டுரைகளையும், பேச்சுகளையுமிட்டு இவர் கைதுசெய்யப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பெற்றார். ஆயினும் இருமாதங்களின்பின் விடுதலை செய்யப்பட்டார். என்றாலும் எதிர்ப்புகளைத் தொடர்ந்து அணிவகுத்து 4,000யுத்தகைதிகளுக்குமேல் தப்பிக்கொள்ள உதவிசெய்தார். யுத்தத்திலே ஒருமுறை இவர் படுமோசமாகக் காயமடைந்தார்.

யுத்தத்தின்பின் இவர் பிரான்சிய பாராளுமன்றப் பிரதிநிதியாகவும், டிஜொன்நகர் மேயராகவும் தெரிவு செய்யப்பட்டார். இருதேர்தல்களிலும் கம்யூனிஸ்தர்களுமே இவரை ஆதரித்தார்கள். டிஜொன்நகருக்கும், ருஷிய ஸ்ராலின்கிறாட் நகருக்குமிடையே நெருங்கிய உறவை ஏற்படுத்திக் குருஷேவின் நண்பராக விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தந்த இன்பத்திலே!......

அதோ!......அந்தக் கிராமத்தின் ஒதுக்குப் புறத்தே ஒரு மலையடிவாரத்தில் வீடொன்று அமைதியில் மூழ்கிக் கிடக்கின்றதே!......ஜனசந்தடி கூட அங்கே காணப்படுவதில்லையே!...உண்மைதான். எப்படி அந்தச்சிறுவீடு கிராமத்துவீடுகளுக்கு ஒதுக்குப்புறமாக இருந்ததோ, அவ்விதமே அங்கு வசிப்பவர்களும் மனிதசந்தடிக்கு ஒதுங்கியே வாழ்ந்து கொண்டிருந்தனர். அங்கு வாழ்ந்து கொண்டிருந்தவர்களுள் ஒருத்தி முதியவள். வாரத்தில் ஒருதடவை கடைத்தெருவுக்குச் சென்று தமக்கு வேண்டிய பொருட்களை வாங்கிவருவதை அக்கிராமத்துச் சனங்கள் காண்பதுண்டு. இளையவளோ பதினேழு வயது நிரம்பாத கலா என்ற கன்னிகை. எப்போதாவது தன் அன்னை வெளியே போயிருக்கும் சமயம், அவள் வந்துவிட்டாளோ என்று அடிக்கடி ஜன்னலினூடாக எட்டிப்பார்ப்பதிலிருந்துதான் அவளும் அங்கே வசிக்கின்றாள் என்பது வெளியுலகுக்குத் தெரியும். மறுவேளைகளிலெல்லாம் முன்புறம் பூட்டப்பட்டிருக்கும் கதவுகளும் ஜன்னல்களும்தான் காட்சியளிக்கும். ஒதுங்கி வாழ விரும்பிய அவர்களைக் கிராமத்தவர்களும் ஒதுக்கியே வைத்தனர்.

நாட்கள் ஓடிக்கொண்டிருந்தன. அக்கிராமத்தின் ஒருபுறத்தே அமைந்திருந்த திருச்சிலுவைக் கன்னியர் நிவாசத்துக் கன்னியர்கள் இருவர் ஒருநாள் இந்த அமைதியானசூழ்நிலையில் அமைந்திருந்த வீட்டிற்குச் சென்றனர். அபலைகளையும், அநாதைகளையும் ஆதரிக்கும் காருண்யரான தம் அன்பர் விரும்பும் சேவையை ஆற்றப் புகுந்தனர். கதவில் டக், டக் என்ற ஒலி கேட்டு முதியவள் வந்து கதவைத் திறந்தாள். கன்னியர்களைக் கண்டதும் "வாருங்கள் சிஸ்டர்" என்று வரவேற்றாள். ஆசனமீந்தாள். உபசரித்தாள். தானும் தன்மகள் கலாவும் அவ்வீட்டில் வசித்து வருவதைக் கூறினாள். மிகவும் பண்பாடு நிறைந்த இந்தப் பெண்மணி ஏன் ஒதுங்கி வாழ வேண்டும் என்ற வினா கன்னியர்களின் உள்ளத்தில் எழுந்தது. ஆனால், அப்பெண்மணியின் வதனத்தில் படர்ந்திருந்த சோகம் அவர்கள் வாய்களை மூடியது. உலகத்தில் வாய்க்குவந்தபடி பேசி, வெந்தபுண்ணிலே வேலைச் செருகும் வேலையைச் செய்பவர்களல்லவே கன்னியர்கள். அமைதியாக விடை பெற்றார்கள். வாரத்தில் ஒருதடவை அவ்வீட்டுக்குச்சென்று கலாவுடனும் அவள் அன்னையுடனும் கலந்துரையாடி வருவர்.

ஒருநாள்மாலை ஆறுமணி இருக்கும். கலா ஓடிவந்தாள் கன்னியர்மடத்துக்கு. "அம்மா சாகக்கிடக்கிறாள். உங்களைக் காணவேண்டுமாம் என்றாள் கன்னியர் மடத்துத்தலைவியிடம். கன்னியர்கள் இருவர் ஓட்டமும் நடையுமாகச் சென்றனர். குருவொருவர் அழைக்கப்பட்டார். கடைசித் தேவதிரவிய அனுமானங்கள் நிறைவேற்றப்பட்டன. உயிர் ஊசலாடும் நிலையில் கலாவை அறைக்கு வெளியே அனுப்பிவிட்டுக் கன்னியரைத்தன்னருகே அழைத்தாள் அவள் அன்னை. தன் சோகவரலாற்றைக் கூறினாள் கன்னியரிடம்.

"நான் ஏன் உலகில் நின்று ஒதுங்கி வாழ்ந்தேன் என்று எண்ணியிருப்பீர்கள். என் கணவர் ஒரு கொலைகாரன். ஒரு மிராசுதாருடன் சேர்ந்து கூட்டு வியாபாரம் நடத்தினார். தன் பங்கையெல்லாம் குடிவெறியிலும், சூதாட்டத்திலும தொலைத்தழித்தார். மிராசுதார் கணக்குக் கேட்டபோது கையை விரித்தார். வழக்குத்தொடர முனைந்தார் மிராசுதார். ஆத்திர வெறியில் அவரைக் கொல்வதற்கு கத்தியுங் கையுமாக நுழைந்தார் அவர் வீட்டினுள். தடுமாறிய நிலையில் அவரது பத்துவயதுப் பாலகனைக் கொன்றுவிட்டு ஓடிவிட்டார். பொலிசில்சிக்கி கொலைத்தண்டனைக்காளானார். கொலைக்குற்றம் கைபிழைபாட்டுக் குற்றமானது. 15வருட கடுமூழிய தண்டனை விதிக்கப்பட்டார். சிறை செல்லுமுன் ஒருநாள் இரவு ஓடிவந்தார் என்னிடம். ஒரு மாதக்குழந்தையாக இருந்த கலாவையும் என்னையும் இவ்வீட்டில் கொண்டுவந்து விட்டார். தன் பிழைகட்கு வருந்தினார். தான் ஒரு கொலைகாரனின்மகள் என்பதைக் கலா அறியக்கூடாது என்று வற்புறுத்தினார். எனக்கு உயிராபத்து ஏதாவது நேரிட்டால் கலாவை உங்களிடம் ஒப்படைக்கும்படியும் கூறினார். அவரது பெயர் செல்வராஜ். எப்போதாவது திரும்பி வந்தால் கலாவை அவர் கையில்!...மூச்சுத்திணறியது வேதனையின் வாழ்க்கையினின்று விடுபட்டுப் பரலோகம் பறந்தாள் திருமதி செல்வராஜ்.

* * *

கன்னியர் நிவாசத்தில் கலா சந்தோஷமாக வாழ்ந்து வந்தாள். அம்மாவை இழந்த கவலையையும் கன்னியரின் அரவணைப்பில் ஓரளவு போக்கிவிட்டாள். நிம்மதியாக வாழ்ந்த அவளுக்கு மாலா என்ற அவள் வகுப்பு மாணவி தோழியாக வாய்த்தாள். கலாவும் மாலாவும் ஆருயிர்ச் சிநேகிதிகளானார்கள். நகமும் சதையும் போல அத்துணை ஒற்றுமையாக வாழ்ந்தார்கள். ஒருநாள் திரு. செல்வராஜ் என்பவரிடமிருந்து கன்னியர் மடத்துத் தலைவிக்கு கடிதம் வந்தது. அதில் கலாவின் அன்னை குறிப்பிட்ட விஷயங்கள் யாவும் அடங்கியிருந்தன. மானமுள்ள தொழிலொன்றில் தான் சம்பாதிப்பதாகவும் கலாவைப் பராமரிப்பதற்கான பணத்தை அனுப்பி வைப்பதாகவும் ஒரு சில மாதங்களில் கலாவைச் சந்திக்க வருவதாகவும் குறிப்பிட்டிருந்தார் அதில். கடுமூழியச் சிறைத் தண்டனை வாசத்தின்பின் கசிந்துருகும் பாவிபோல வர்ணிக்கப்பட்ட அக்கடிதத்தை கன்னியர்கள் கலாவுக்கு காட்டவேயில்லை. எனினும் அவளது அப்பா எங்கிருந்தோ பணம் அனுப்பி வருகிறார் என்பதைமட்டும் அவளுக்குத் தெரிவித்தனர்.

பாடசாலை விடுமுறை நத்தால் திருநாளுக்கென ஆரம்பமாகியது. மாலா கன்னியர்களிடம் இரந்து கேட்டுக் கொண்டதினால் கலா மாலாவுடன் விடுமுறையைக் கழிக்க அவள் வீடு சென்றாள். மாலாவின் அப்பா பெரிய மிராசுதார். ஆகவே, மாலாவின் வீட்டில் கலா வெகு சந்தோஷமாக நாட்களைக்கழித்தாள். மாலாவின் அப்பா அம்மா இருவர்க்கும் கலாவைப்பிடித்துக்கொண்டது. அவளது அழகு, அடக்கம், பணிவானபேச்சு, இனியகுரல்யாவும்அவளைத்தம் வீட்டு மருமகளாக்கிக் கொள்ள வேண்டும் என்ற அக்கறையைக்கூட அவர்கள் உள்ளத்தில் உருவாக்கியது. நத்தால் வைபவத்துக்கென மாலாவின் அண்ணா ராஜனும் வந்திருந்தார். எங்கோ எஞ்சினியராகக் கடமையாற்றும் ராஜன் புத்திசாலி மட்டுமல்ல, குணத்திலும் குன்று. அத்தகைய ராஜனின் மனதை நல்லவளான கலா ஈர்த்ததில் அதிசயமொன்றுமில்லையே. காதல் அரும்பியது. மொட்டவிழ்த்து மலர்ந்தது. எப்படியோ மாலாவுக்குத் தெரிந்துவிட்டது. அவள்தான் படுசுட்டியாயிற்றே. விட்டுவைப்பாளா?... அப்பா அம்மாவிடம் சொல்லிவைத்துவிட்டாள். பழம்நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. இருபக்கத்திலும், எப்படி ராஜனிடம் கேட்பது என்று அப்பாவும் அம்மாவும், எப்படி அப்பா அம்மாவிடம் சொல்வது என்று ராஜனும் திண்டாட வேண்டிய கட்டமே ஏற்படவில்லை. அவர்களது இன்பத்

[தொடர்ச்சி மறுபக்கம் பார்க்கவும்]



# மகளிர் மன்றம்

## (ஆறுவது ஆண்டு நிறைவிதழ்)

அன்புநிறை நேயர்களே! அகமகிழ்வீர்!........

(கண்ணன் என்னும் மன்னன் பேரை எ. மெ.)

"மகளிர் மன்றம்" என்றபேரைச் சொல்லச் சொல்ல
மனதினிலே உவகைபொங்கும் மெல்ல மெல்ல
"மகளிர் மன்றம்" ஆண்டு நிறைவெய்த எய்த
மாதருலகும் மாண்புபெறும் மெல்ல மெல்ல!........

பார்புகழும் புனிதர் வாழ்வைக் காட்டிடுமே
பரிசுத்தராய் வாழ ஆர்வம் ஊட்டிடுமே
ஊர்க்குருவி "கீச்.. ....கீச்" என்று வந்திடுமே
உலக செய்தி உளம் ரசிக்கச் சொல்லிடுமே!....

இதழ்களெல்லாம் கவிதைத் தொகுப் பலங்கரிப்பு
இனிய நறுந் தேனைச் சுவைகரும் மெய்ச்சிலிர்ப்புப்
மழலைப் பாப்பாக் கவிதைகளோ ஓர்ரசிப்பு
மாதர் நலன் கோரும் பாக்கள் தனிமதிப்பு!....

பாட்டா பாட்டிக் கதைகள் பல நிறைந்திருக்கும்
பலரசனைக் கட்டுரைகள் குவிந்திருக்கும்
குட்டித் தூதர் கதைகள் மோட்சம் இட்டுச்சென்றே
எட்டிப் பார்த்தே சிரிக்க வைக்கும் இன்பமூட்டும்!....

கதையின் ஆசை தீர்ப்பதெங்கள் மகளிர்மன்றம்
கவிதை ரசனை யூட்டுவதும் மகளிர் மன்றம்
வளர்பிறையாய் வளர்ந்தே என்றும் மணங்கமழ
வான்பதிவாழ் தாய்மரியை இரந்திடுவோம்!........

—ரோஜா



# அருளப்ப அண்ணல்கண்ட ஆரணங்குகள்

## ஆனிமாதம் 4-ந்தேதி அருளப்ப பாப்பரசர் அமரத்துவமடைந்த 5-வது ஆண்டாகும்

### ஜாக்குலின் கென்னடி

தமது விருந்தாளிகளுடன் சில வார்த்தைகளாவது அவர்களது மொழியில் உரையாடி அவர்களை மகிழ்விப்பது அருளப்ப தந்தையின் முக்கிய கருத்து. அமெரிக்க அதிபரின் பாரியார் வத்திக்கானுக்கு வருகை தந்த வேளை, வத்திக்கான் இராச்சியபார அமைச்சர் கர்தினல் சிக்கோஞானி பலவருடங்கள் அமெரிக்காவில் கழித்தவர். அவரிடம் அமெரிக்க முதலாவது சீமாட்டியை வரவேற்கும் விதத்தை இத்தாலிய லிபியில்எழுதிப் பெற்றுக் கொண்டார் அருளப்பர்.

அமெரிக்க சீமாட்டியை திருமதி கென்னடி அவர்களேஎன்றோ கென்னடி சீமாட்டி அவர்களே என்றோ அழைக்கலாம்என அமைச்சர் சொல்லிக்கொடுத்திருந்தார். காலைநேரம் முழுவதும் பாப்பரசரின்வாய் மிசிஸ் கென்னடி, மேடம் கென்னடி என அடிக்கடி கூறிக்கொண்டேயிருந்தது. பரிசுத்த தந்தையே யாருடன் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்எனக் காரியதரிசி கேட்டபோது, என்னைக் குழப்பாதே, வீட்டுப்பாடம் செய்துகொண்டிருக்கிறேன் எனப் பதில்வந்தது.

இறுதியாக அருளப்பர் காத்திருந்த தருணம் வந்தது. வத்திக்கான் அதிகாரிகள் ஜாக்குலின் கென்னடியை அழைத்துக்கொண்டு வந்தனர். அவளது அடக்கமும், எளிமையான தோற்றமும், குழந்தைத் தன்மையான முகத்தோற்றமும் கண்டபாப்பரசர் வீட்டுப்பாடத்தையேமறந்துவிட்டார். வா, ஜாக்குலின் எனத் தம்மை மறந்து மகிழ்ச்சியுடன் ஒரு குழந்தையை அழைப்பது போலக் கூவினார்.

### ராடா அட்ஜூபி

ருஷிய பிரதமர் நிகித்தா குருச்சேவின அருமைப்புதல்வி ராடா, அவள் தன் கணவனுடன் உரோமைக்கு வந்திருந்தாள். இருவரும் பாப்பரசரின் தரிசனம் பெற்றனர். ராடா வத்திக்கானின் விதிகட்கமையவே ஆடைகள் தரித்திருந்தாள். கருப்பு வலையொன்று அவள் சிரசை மறைத்துக்கொண்டிருந்தது.

பாப்பரசருக்குத் தனது கணவரை அறிமுகப் படுத்தும்போது பாப்பரசரையே உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த ராடா தனதுமுறை வந்தபோது உணர்ச்சிவசப்பட்டவளாக அருளப்ப தந்தையின் கரங்களிரண்டையும் தனது கரங்களால் தாவிப்பிடித்து முத்தமிட்டாள். இதுபற்றிப் பின்னர்அவள் குறிப்பிட்டதாவது:

"ஆடம்பரத்திலும், படாடோபத்திலும் வாழ்க்கை நடாத்தும் ஓர் உரோமைய சீமானாக அவரை நான் எண்ணியது எவ்வளவு தவறு. சிறுவயதில் கடினவேலைசெய்து காய்த்துப் போயிருக்கும் என் தந்தையின் கரங்களைப் போலவே அவரது கரங்களையும் கண்டேன்.

[தொடர்ச்சி மறுபக்கம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈஸ்டர் தந்த இன்பத்திலே !....

[மகளிர்மன்றத் தொடர்ச்சி]

திக்கு முட்டுக்கட்டை போட்டது விடுமுறைமுடிவு. எனினும் சந்தோஷத்துடனே பாடசாலைக்கும், மனநிம்மதியுடனே காரியாலயத்திற்கும் சென்றனர் கலாவும் ராஜனும்.

* * *

காலம் விரைந்தது. ஈஸ்டர் விடுமுறை வந்தது. மாலாவின் அப்பா திரு. ஞானனந்தம் கார்விபத்தொன்றக்குள்ளானார். நல்லகாலமாக காலொன்று முறிந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார். விடுமுறையில் மீண்டும் வீடுவந்த மாலா, ராஜன், கலா அனைவோரும் அப்பாவை அடிக்கடி வைத்தியசாலையில் தரிசிக்கச் செல்வர். பெரிய வியாழன்று கலாவின் அப்பா கலாவைக் காணவருவதாக திரு. ஞானனந்தன் வீட்டுக்கே செய்தி கிடைத்தது. கன்னியர்கள் மூலம் விஷயங்களை அறிந்திருந்த திரு. செல்வராஜ் அடுத்தநாள் தன் மகள் கலாவைப் பார்க்க வருவதாக எழுதியிருந்தார். எல்லோரும் இன்பத்தில் மூழ்கினர். பெரிய வெள்ளியன்று கலாவின் அப்பா வந்தார். கலாவைக் கட்டியரவணைத்தார். பிரிந்தவர் கூடினல் பேசவும் வேண்டுமா?...இந்தச் சந்தோஷத்தை மாலாவின் தந்தையருடன் பகிர்ந்து கொள்ள யாவருமே வைத்தியசாலைக்குச் சென்றனர்.

திரு. ஞானனந்தம் படுத்திருந்த அறையினுள் நுழைந்தனர் திருமதி ஞானனந்தமும் மாலா, ராஜன், கலாவும், கலாவின் அப்பாவும். "அப்பா! ...கலாவின் அப்பா வந்துவிட்டாரே இதோ பாருங்களேன் !......"மகிழ்வு பொங்கக் கூறினுள் மாலா. ஞானனந்தம் ஏறெடுத்து நோக்கினர் செல்வராஜை. அன்புப் பேச்சுக்கள் பரிமாறப்படுவதை எதிர்பார்த்தனர் அனைவோரும். ஆனல் !...அந்தோ !...... கொலைகாரா !... நீயா !...." என்கண் மணி மோகனைப் பதைக்கத்துடிக்கக் கொன்றநீயா!..." அலறினர்ஞானனந்தம். ஒரு கணம் நிசப்தம், செல்வராஜ் மண்டியிட்டார் ஞானனந்தத்தின் படுக்கையருகே. "என்னை மன்னித்துவிடுங்கள். ஆத்திரவெறியில் செய்துவிட்டேன். தண்டனையையும் அடைந்துவிட்டேன். பழிக்குப்பழி வாங்குவது மனித இயல்பு. ஆயின் மன்னித்து மறப்பது தெய்வீகமல்லவா ? "இறைஞ்சினர் செல்வராஜ். கொலைகாரனே !...வெளியே போ!... அன்று கத்தியினல் என் மைந்தன் மோகனை என்னிடமிருந்து பறித்தாய். இன்று உன் மகள்...கொலைகாரனின் மகள்...காதல்வலைவீசி என் மகன் ராஜனையும் என்னிடமிருந்து பறிக்க எத்தனிக்கிருள். உன் மகளையும் அழைத்துக்கொண்டு போய்விடு !..." கத்தினர் ஞானனந்தம்.

சிலையாய் நின்றனர் அனைவரும். கலா மயங்கி வீழ்ந்தாள். மன்னிக்கும் பண்பும், பாசமுள்ள உள்ளமும் கொண்ட மாலாவும் அவள் அன்னையும் தாங்கிக் கொண்டனர் கலாவை. ராஜன் மாலாவின் அப்பாவுக்காக இரந்தான் தந்தையிடம். அப்பா!...அதோ சிலுவைநாதரைப் பாருங்கள். இன்று பெரிய வெள்ளியல்லவா ?...தன்னைக் கொலைசெய்த யூதருக்காகப் பிதாவை இரந்த யேசுவின் வார்த்தையை நினைவு கூருங்கள். "பிதாவே!...இவர்கள் அறியாமற் செய்கின்றார்கள். இவர்களை மன்னித்தருளும்" என்ற வசனத்தை நாமும் பின்பற்ருவிட்டால் நாம் கிறிஸ்தவர்களா அப்பா ?..." ஞானனந்தம் திருச்சிலுவையை நோக்கினர். அவர் கண்களில் நீர் கசிந்தது. செல்வராஜை அருகே அழைத்தார். கட்டித்தழுவிக்கொண்டே "செல்வராஜ்!...,உம்மை யேசுவுக்காக மன்னித்து விடுகின்றேன். மன்னிப்பது மட்டுமல்ல உம்மகள் கலாவுக்கு என்னைவிட சிறந்த குணநிசயங்கள் படைத்த என் மகன் ராஜனையும் வாழ்க்கைத் துணைவனுக அளிக்கின்றேன். சந்தோஷம்தானே !... என்ருர் உள்ளமுருக. செல்வராஜ் என்ன மறுமொழி கூறுவார்?......

அந்த ஈஸ்டர் விழா அவர்கட்கு ஈடில்லாஇன்பம் அளித்தது. ஞானனந்தம் பூரண சுகமடைந்து வீடு திரும்பியதும் கலா—ராஜன் திருமணத்தைக் கோலாகாலமாக நிறைவேற்றி வைத்தாரென்று சொல்லவும் வேண்டுமா ?...

## நன்றியறிந்த ஸ்தோத்திரம்

நெடுந்தீவு நடுப்பகுதி இராசேந்திரம் இராசையாவைப் பீடித்திருந்த நெஞ்சுநோய் இரண்டுவருடகாலமாக எவ்வித சிகிச்சைக்கும் குணப்படாமல் கடைசியில் பேசும் சக்தியையும் இழந்து அவதிப்பட்டதுகண்டு புனித அந்தோனியாரில் நம்பிக்கை வைத்து வேண்டி வந்தேன். அதிசயப்படும்முறையில் அவர் குணமடைந்ததுடன் முன்போல் பேசவும் செய்கிருர். 1936-ம் வருடம் கச்சதீவில் கோவில்கொண்டெழுந்தருளியிருக்கின்ற புனித அந்தோனியார் திருநாளுக்குப் போயிருந்த எனது மனைவின் கழுத்தணியிலிருந்த தங்கப்பதக்கம் அவரின் சேத்திரத்திலே விழுந்து கைக்கெட்டாது போய்விட்டது. இருபதுவருடகாலத்தின்பின் முதன்முதலாக நான், மனைவிசகிதம் அங்கு சென்றிருந்தபோது அற்புதமாக அதே பதக்கமானது யாத்திரிகர் ஒருவரால் கண்டெடுக்கப்பட்டு அப்பதி விசாரணைக்குரவர்மூலம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. காணமற்போன பொருளைப்பற்றி நான் சிந்தித்ததேயில்லை அற்புதவரத்தரில் அதி நம்பிக்கை வைப்போர் ஒருபோதும் கைவிடப்படமாட்டார்கள் என்பதற்கு இஃதோர் தக்க சான்றன்ருே !

சிமியோன் சின்னத்துரை,
35, டேவிட் ரோட்,
யாழ்ப்பாணம் 76-68

பள்ளிமுனை
ம. எஸ்தாக்கி யான்சனின்
## 3-வது வருட மரணஞாபகம்

"ஆண்டவரே, இவருக்கு நித்திய இளைப்பாற்றியை அருளும்; முடிவில்லாத பேரொளி இவர்மீது ஒளிர்வதாக."

"ஜீவியத்தில் நேசித்தோம், மரணத்தில் மறவோம்."

மண்ணில் மறைந்தாலும் எங்கள் மனக்கண்முன் மாருதிருக்கும் எங்கள் அன்புத்தந்தை ம. எஸ்தாக்கி யான்சன் இறைவன் திருவடிசேர்ந்த மூன்ருவது வருடம் 3-6-68-ல் பூர்த்தியாகிறபடியால் இதைக் கண்ணுறும் வண. குருக்கள், சங். கன்னியர், பந்துமித்திரர், மற்றனைவரும் இவ்வாத்தும இளைப்பாற்றிக்காக மன்ருடுமாறு கேட்டுக்கொள்ளுகின்ரும்.

அன்னரை இழந்து துயருறும் மக்கள்: ராஜேஸ்வரி, ரோசா, மேபிள், யசிந்தா, கியோமார், நிர்மலா, கிறேஷியன், றமீலா, மெல்சின் மற்றும் மருமக்கள், சகோதரர், மைத்துனர்கள், பேரப்பிள்ளைகள் ஆகியோரும்.

"இராஜேஸ்வரி இல்லம்"
பள்ளிமுனை, மன்னர். 77-68

## அர்ச். வின்சென்ற் டீ போல் தருமசபை

அர்ச். வின்சென்ற் டீ போல் தருமசபைப்பந்திகளின் முதலாம் கால்வருடப் பொதுக்கூட்டம் ஆனிமாதம் 3-ம் தேதி (போயாதினத்தன்று) பி. ப. 5 மணிக்கு சஞ்சூசையப்பர் பந்திச்சாலையில் ஆரம்பமாகி நடந்தேறும் அங்கத்தவர்கள் எல்லோரும் நேரகாலத்தோடு சமுகங்கொடுக்குமாறு தயவாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள்.

இங்ஙனம்
A. S. FRANCIS of MARY,
சபைக் கர்த்தருக்காக.

யாழ்ப்பாணம்.
29-5-68

நாவாந்துறைப் பாடசாலையும்
## அமைச்சர் திருச்செல்வமும்

யாழ்-மாநகரசபையினல் 27-5-68 முதல், 2-6-68 வரை நடைபெறும் குடிநல சுகாதாரவாரவிழா ஆரம்ப அங்குரார்ப்பணம் யாழ்-நாவாந்துறை றோ. க. த. க. பாடசாலையில் ஆரம்பமானது. அன்று காலை 9-00 மணியளவில் உள்ளூராட்சிக் கௌரவமந்திரி திருச்செல்வம அவர்களும், மாநகர ஆணையாளர்களும், சுகாதார அதிபரும், உதவியாளர்களும் சமுகந் தந்தனர். பாடசாலைத் தலைமையாசிரியர் நீ. எஸ்தாக்கி அவர்கள் மாலை சூட்டி மந்திரி அவர்களை வரவேற்ருர். ஆசிரியர்களும், மாணவ, மாணவிகளும் அணிவகுத்து முன்செல்ல மந்திரி அவர்கள் பாடசாலை வாயிலை அடைந்ததும் ஆசிரியர் ச. வ. பீற்றப்பிள்ளை அவர்கள் சந்தனத்திலகமிட, மந்திரி அவர்கள் தீபமேற்றி வைத்தனர். அலங்கரிக்கப்பட்ட பாடசாலை மேடையில் தலைமையாசிரியர் தலைமையில் வரவேற்புவிழா ஆரம்பமானது. தலைவர் மாநகரசபை சுகாதாரத்தில் செய்யும் அளப்பரிய சேவைகளை விரித்துக்கூறிச் சபையின் நன்முயற்சிகளை ஊக்குவிக்க இவ்வாண்டு விழாவிற்குக் கௌரவ மந்திரி அவர்கள் சமுகமாகி ஆரம்பிக்க எம் பாடசாலைக்கு வருகைதந்ததிற்குப் பாடசாலையினதும், நாவாந்துறை மக்களினதும் பெயரால் நன்றி கூறி வரவேற்புரை வழங்கினர். மந்திரி அவர்கள் நன்றி கூறினர். தொடர்ந்து கௌரவ மந்திரி அவர்கள் விளக்குமாறு பிடித்து நகர துப்புரவு இயக்கத்தை ஆரம்பித்து வைக்க, பாடசாலைப் பிள்ளைகளாலும், சென்மேரிஸ், சென்நீக்கிலஸ் சனசமூக நிலையங்களின் அங்கத்தவர்களாலும் கான் முழுவதும் கிராம சுத்தம் நடைபெறலாயிற்று.

## அருளப்ப அண்ணல்...

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

### இரண்டாவது எலிசபேத்

எலிசபேத் மகாராணி வத்திக்கானுக்கு வருகைதந்தபோது அருளப்ப அண்ணல் அவரை நூல்நிலையத்துக்கு அழைத்துச்சென்று பல தொல்பொருட்களையும் காட்டினர். பாப்பாசரும், ராணி எலிசபெத்தும் பிராஞ்சிய மொழியில் வல்லுனர்கள். எனவே அவர்கள் சரளமாக உரையாடினர்.

அங்கிருந்த பலபொருட்களையும், காட்டி அவை சம்பந்தப்பட்ட சரித்திர நிகழ்ச்சிகளையும் கூறிக்கொண்டே வந்தார் பாப்பு. ஓரிடத்தில் முதலாம் எலிசபேத் அரசியைத் திருச்சபையினின்றும் வெளியேற்றிய அக்கால பாப்புவின் பிரகடனம் வைக்கப்பட்டிருந்தது. அதைக் கண்டதும் எலிசபேத் அரசியின் வதனத்தில் சிறு வாட்டம் தோன்றியது.

தமது விருந்தாளியைப் புண்படுத்த விரும்பாத அருளப்பர் முன்னே ஒரு பாப்பரசர் இங்கிலாந்தின் அரசியைத் திருச்சபையினின்று கலைந்துவிட்டார். அந்தக் குறையை நீக்க இப்போது ஒரு பாப்பரசர் இங்கிலாந்தின் அரசியை வத்திக்கானுக்குள் அல்லவா ஏற்றுக் கொண்டிருக்கிருர் என்றுகூறினர். பாப்பரசரின் நகைச்சுவைப் பேச்சு அரசியையும் அவரது கணவரையும் பலநிமிடங்கள் சிரிக்கவைத்தது.

### தென்னமரிக்க அழகி

அருளப்பதந்தை பிரான்சில் பாப்பாசரின் தூதுவராக இருந்தவேளை, ஒரு தென்னமரிக்க தூதுவரின் இல்லத்தில் நடைபெற்ற விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தார். தூதுவரின் துணைவி மிக்க அழகி. உடலைஇறுக்கும் கட்டைப்பாவாடை அணிந்திருந்தாள். அருளப்பருக்கு அவளின் பக்கத்தில் ஆசனம் தரப்பட்டிருந்தது. கேவலமான உடையணிந்த அழகியின் பக்கத்தில் கர்தினலாண்டவர் இருக்கநேரிட்டதே என்று அங்கிருந்த விருந்தினர்களெல்லாம் அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்கள். கர்தினலின் நிலையும் தர்மசங்கடமானதாய் இருந்தது. அங்க அழகுகளையெல்லாம் வெளியாகக் காட்டிக்கொண்டிருக்கும் அவளுடன் எப்படிப் பேசுவது? எல்லோரும் தன்னையே உற்றுப் பார்ப்பதுகண்ட கர்தினல் இறுதியாகக் கூறினர்: "எனக்குப் பக்கத்தில் அழகான இளமைததும்பிய ஒரு சீமாட்டி இருக்கும்போது எல்லோரும் ஏன் இந்தக் கிழவனையே பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள்."

சா. பெனடிக்ற்

## திரிகோணமலை

திரிகோணமலைத் திருமறைக் கலாமன்றம் இம்மாதம் முற்பகுதியில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது. அவ்வைபவத்தில் பலபகுதியில் இருந்தும் பலஎழுத்தாளர்கள், கவிஞர்கள், கட்டுரை ஆசிரியர்கள் மற்றும்பல மதப்பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

தீர்மானம்: "ஞானதீபம்" என்னும் சஞ்சிகை மாதம்ஒருமுறை வெளியிட வேண்டுமென்றும் அவ்விதழ் அரசியல் சார்பற்று, விளங்கவேண்டுமென்றும், எல்லா மதத்தையும் தழுவிய முறையில் பொது அறிவு, மத ஆராய்ச்சி, மகளிர்க்கான விடயங்கள் இடம்பெற வேண்டுமென்றும், சிறுவருக்கென ஒருபகுதியை ஒதுக்கி அவர்கள் கலையை நல்லமுறையில் பயன்படுத்தி வருங்காலத்தில் நாட்டுக்குச் சேவை செய்யவும் தூண்டுகோலாய் அமைய வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

போஷகர்: வண. பிதா திருஞானதீபன். ஆசிரியர்: திரு. எம். எ. சூசைதாசன். கட்டுரை கதைப்பகுதி: திரு. தா. பி. சுப்பிரமணியம். கவிதை: போராசிரியர், சிவசேகரன். மகளிர் பகுதி: செல்வி செல்வமணி வடிவேலு, B.Sc. சமயப்பகுதி: புலவர் சோமஸ்கந்தர், வண. பிதா திருஞானதீபன். சிறுவர் பகுதி: தம்பி தில்லைமுகிலன்.

திருமதி மாரிமுத்து காணிக்கைமேரி
இறைவனடி சேர்ந்த
## ஐந்தாவதாண்டு நினைவு
மறைவு: 7—6—63.

"சருவேசுரா, இரக்கங்களின் ஆண்டவரே! மரித்த வருடாந்தாளை நாங்கள் ஞாபகம்செய்கிற உமது அடியாளாகிய இவ்வாத்துமத்துக்கு இளைப்பாற்றியின் இடத்தையும், சமாதானத்தின் பாக்கியத்தையும், மகிமையின் ஒளியையும் கட்டளை இட்டருளும். தேவரீரோடும் பரிசுத்த ஆவியின் ஐக்கியத்தில் ... ..." ஆமென்.

எம் உள்ளமெல்லாம் நீக்கமற நிறைந்துள்ள எம் அன்னையார் எமை விட்டுப் பிரிந்த ஐந்தாவதாண்டு 7-6-68 இல் நிறைவுறுவதால், இதைக் கண்ணுறும் யாவரும் இவ்வாத்துமத்துக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகின்ரும்.

மக்கள், மருமகள், பேரர்,
78/11, பாத்திமாகிரி வீதி,
மட்டக்களப்பு.
28/68

## நன்றித்துதி

பரிசுத்த யேசுவின் இரக்கத்தினுலும், புனித அந்தோனியார், புனித யூதாததேயு, பரிசுத்த செபமாலைமாதா இவர்களின் மன்ருட்டினல் எனக்கும் என் குழந்தைக்கும் பூரணசுகம் கிடைத்ததற்கு நேர்த்தியின்படி பிரசுரம்பண்ணுகிறேன்.

75-68 ஓர் அடியாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருளும் உலகிலே

● உலகிலேயே மிகப்பெரிய புத்தகம்ஒன்று பிரித்தானியில் அச்சாகிறது. இதன்நிறை ஒன்றரைத் தொன்னாய் இருக்கும். இதனை அச்சிட்டுமுடிக்கப் 10 வருடங்கள் செல்லும். ஒவ்வொன்றும் 704பக்கங்கள்கொண்ட 610 தொகுப்புகளை அடக்கிய இப்புத்தகத்தில் 1கோடியே 20லட்சம் நூல்களின் விபரங்கள் அடங்கியிருக்கும். இந்தஇராட்சதபுத்தகம் ஒன்றின்பெறுமதி 9,000 டலராய் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

● பர்மாவின் மேற்குப்பகுதியிலே அக்கியாப் துறைமுகப் பட்டணத்திலும், அதனைச்சூழவரவுள்ள இடங்களிலும்வீசிய சூறுவளியால் இறந்தவர்கள் 1,073பேரெனத் தற்போது கண்டறியப்பட்டிருக்கிறது. 30,000 மக்கள் தங்கள் வீடுவாசல்களை இழந்திருப்பதாகவும், பலலட்சக்கணக்கிலே நஷ்டம் ஏற்பட்டிருப்பதாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

● கம்யூனிஸ்த நாடுகளில் ஒன்றுகிய செக்கோசிலவக்கியாவின் புதிய தலைவர்கள் அங்கு ஜனநாயக ஆட்சிமுறையிலே எடுத்துள்ள அரசியல் நடவடிக்கைகளுக்குச் சோவியற் பிரதமர் அலக்ஸி கோசிஜின அங்கீகாரம அளித்திருப்பதாக மஸ்கோவிலிருந்து செய்திகிடைத்திருக்கிறது. அவர்அந்நாட்டிற்கு ஒருவாரகாலம் விஜயம் செய்துவிட்டுத திரும்பிய பின்னர்தான் இச்செய்தி வெளிவரலாயிற்று.

● தென்னுபிரிக்காவிலே ஜொகானேஸ்பேர்க் நகரின் பெரிய ஆஸ்பத்திரியிலே 48 வயதுள்ள ஒருபெண்ணின் ஈரல் இயங்காமையால் டக்றர்மார் ஒருபன்றியின் ஈரலைக் குழாய்மூலம் அவள்உடம்பில் இணைத்துச் சிகிச்சை செய்ததின் விளைவாக இப்போது அப்பெண்ணின் பொதுவானநிலை நன்றுயிருக்கிறதாம். பழுதடைந்து இயங்காமற்போன அவளுடைய ஈரல் மீண்டும் பலம்பெற்று வருகிறதாம்.

● அமெரிக்க விவசாயப்பகுதி விஞ்ஞானிகள் பசும்பாலை ஒருபுதிய முறையில் பக்குவப்படுத்திப் புதியபால் மாஒன்றைத் தயாரித்துள்ளார்கள். இது சுவையிலும், குணத்திலும், ஏறக்குறைய அன்றுகறந்த பால் போலவே இருக்கின்றதாம். இந்தப புதிய பால்மா வியாபாரமுறையில் தயாரிக்கப்படும்பொழுது மறந்த பாலோடு விலையிலே போட்டியிடுமாம்.

மாலுமிகளும், தளபதிகளுமாகத் 99பேரை அடக்கிய ஸ்கோப்பியன் என்ற அணுச்சக்தியால் இயக்கப்படும் அமெரிக்க நீர்மூழ்கிக்கப்பல் மத்தியதரைக் கடலிலிருந்து தாயகம் திரும்புகையில் காணமற்போய்விட்டதாக வாஷிங்ரனிலிருந்து செய்தி எட்டியிருக்கிறது. சென்ற பங்குனி மாதம் 21ஆம் திகதிக்குப்பின் அதனுடன் வானொலித்தொடர்புகொள்ள முடியவில்லையாம்.

● லண்டன்நகரில் இருந்துவருகின்ற புனிதபிரான்சீஸின் குஷ்டரோகர் உதவிச்சங்கமானது உலகமுழுவதிலுமுள்ள குஷ்டரோகர்களுக்கெனச் சென்றவருடம் 23,700பவுண் சேகரித்திருக்கிறது. இது முந்திய வருடம் சேகரித்ததொகையிலும் 1,300பவுண் கூடியதாகும்.

● திருச்சபை துன்புறுத்தப்படும் நாடுகளில் குருத்துவ, சந்நியாச அழைத்தல்கள் பலகாலும் அதிகரித்திருக்கின்றன; போலாந்து, யூகோசிலாவியா ஆகிய இரு ஐரோப்பியநாடுகளும் தேவ அழைத்தலகள் வெகுவாக அதிகரித்துவரும் இரு ஐரோப்பிய நாடுகளென்று சந்நியாசசபைகளின் திருச்சங்கத் தலைவரான கருதினல் அன்ரோனியுற்றி ஆண்டகை தெரிவிக்கின்றார்.

● அமெரிக்க வோர்செஸ்றர் நகரிலுள்ள மோட்சாரோபணமாதா கல்லூரியின் அதிபரான வண. லூயிஸ் டியன்சுவாமியார் மஸ்கோநகரிலுள்ள அமெரிக்க கத்தோலிக்கரின் விசாரணைக்குரவாக மீளவும் நியமனஞ் செய்யப்பட்டிருக்கின்றார். 1933ஆம் ஆண்டு றூஸ்வெல்ற—லிற்வினவ் உடன்படிக்கையைத் தொடர்ந்து மஸ்கோ நகரில் ஓர்அமெரிக்க கத்தோலிக்க விசாரணைக்குரவர் தொடர்பாக இருந்துவருகிறார்.

● வத்திக்கானிலே சுவிஸ்காவலர்களாய் நவமாகத் தெரிவுசெய்யப்பட்ட 17பேர் அன்றுசனிக்கிழமை மிக்கேல் ஆஞ்ஜெலோஎன்ற பிரபல சிற்ப-சித்திர மேதையால நிர்மாணிக்கப்பட்ட ஆடம்பரமான உடைகளைத் தரித்துச் சத்தியப்பிரமாணம் செய்தனர். இவர்கள் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்தவர்கள். பிரமச்சாரிகள். 25 வயதுக்கு உட்பட்டவர்கள். 5அடி 8அங்குல உயரமுடையவர்கள்.

❁ அமெரிக்காவிலே 10கோடிடலர் (75கோடிரூபா) பெறுமதியான சொத்துள்ளவர்களாய் 150 பேரும், 100 கோடிடலருக்கு மேற்பட்ட (750கோடிரூபா) சொத்துடையவர்களாய் இருவரும் இருக்கின்றனர். பிந்தியவர்களில் ஒருவர் எண்ணெய்த்தொழில் கோடீசுவரான திரு. போல் கெற்றி. மற்றவர் விமானத்தொழில் அதிபராயிருந்து சொத்துகள் வாங்குபவராக மாறியுள்ள திரு.ஹோலாட் ஹியூஸ்.

> "மனிதன் குறையுடையவன் மட்டுமல்ல, குறைகாண்பவனும் ஆவான். பிறர்குறையைக் காணபவன் அரைமனிதன். தன்குறையைக்காண்பவன் முழுமனிதன்."
>
> — சொக்கிரரீஸ்

## கிறிஸ்துவ தொழி ...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிறிஸ்துவே அவனிலிருந்து அவனை நடாத்துகிறார்.

### நான் கடவுளுக்குத்தேவை!

ஆம், தேவன் எங்கள் ஒவ்வொருவரையும் அழைக்கிறார். என்னபாக்கியம்! ஒரு தொழிற்சாலையில் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளியும் அங்கே தேவையாயிருப்பதுபோல் நாம் ஒவ்வொருவரும் கடவுளின் மகிமைக்குத் தேவையாய் இருக்கக் கடவுள் சித்தமானார். எனவே எவ்வளவு தாழ்மையான அந்தஸ்தில் இருந்தாலும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது ஊழியம் கடவுளுக்குத் தேவையென்றும் அதைத் தனது அளவில்லாத அன்போடு விரும்புகிறாரென்றும உணர வேண்டும். அப்பொழுதுதான் எங்கள் கடமைகள் எவ்வளவு கசப்புநிறைந்தது போலிருந்தபோதும அதைக் கூடிய விருப்புடன் செய்யலாம். கடமைகள் கிறிஸ்துவில் பெருமைகளாகி எங்கள் உன்னத உரிமைகளாகின்றன. எல்லோரையும் தேவன் ஓர் உன்னத ஞானவிவாகத்திற்கு அழைக்கிறார். இவ்வழைத்தலுக்குத் தகுந்தவர்களாக என்றுமிருப்போம். அவர் அறியாத சம்பாவனை அளிப்பவர். அவர் தனது பேரின்பத்தில் எல்லோரையும் இரண்டறக்கலப்பவர். என்றும் அவரின் ஊழியத்தில் பிரமாணிக்கமாய் இருப்போம். அப்பொழுதுதான் எங்களுக்கெனத் தயாரிக்கப்பட்ட நித்திய ஆனந்தத்தை என்றென்றும் சுதந்தரித்துக்கொள்வோம் கிறிஸ்து ஒரு மிகவும் உன்னத தொழிலாளி. கிறிஸ்தவர்களெல்லோரும் கிறிஸ்து[illegible] லாளிகளாவோம்.

# முருங்கன் பாராட்டு விழா

முருங்கன் றோ. க. பாடசாலை 11-5-68 சனிக்கிழமை அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. முன்னாள் தலைமையாசிரியர் திரு. ச. நீக்கிலாப்பிள்ளை அவர்கள் சேவையின் நின்றும் இளைப்பாறியதால் அவர்களின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டுவதற்காக பழைய மாணவர்களும், நண்பர்களும் விழாவெடுத்தனர்.

இயற்கைப் பூக்களினால் அலங்கரிக்கப்பட்டிருந்த கிறீஸ்துராசா கோயிலில் பெருந்திரளான மக்கள் குழுமியிருக்க நன்றித்தோத்திர விழாப்பூசை வண. யோசவ் அவர்கள் நடாத்த, விழா ஆரம்பமாகியது. சமூகமானோர்க்கும், விழாநாயகருக்குங் காலை விருந்தளிக்கப்பட்டது. தொடர்ந்து பழைய மாணவர்கள், ஆசிரியர்கள் காபந்தாட்டப் போட்டியும் நடந்தேறியது.

முருங்கன் பங்குக்குரு வண. ஏ. சேவியர் குரூஸ் அவர்கள் தலைமையில் நடந்த பகற்போசன விருந்தில் வண. யோசவ் அவர்களும், பழைய மாணவர்களும், நண்பர்களுமான எண்பது பேர்கள் கலந்து கொண்டனர். இளைப்பாறிய ஆசிரியரும், மாந்தைக் கிராமச் சங்கத் தலைவருமான எஸ். பறுநாந்து, செல்வம் சந்தாம்பிள்ளை, வேதநாயகம், திருமதி லில்லி அற்புதசிங்கம், வேறு பலரும் பாராட்டுரை வழங்கினார்கள்.

பிற்பகல் 5-00 மணியளவில் நடைபெற்ற பாராட்டு விழாவில் செல்வன் நூர்தீன் விழாநாயகரை மாலைசூட்டி வரவேற்க, முன்னாள் உடனாசிரியரும், மடுறோட் பெரிய முறிப்பு அ. த. க. பாடசாலைத் தலைமையாசிரியருமான பி. அந்தோனிப்பிள்ளை அவர்கள் தலைமையில் பாராட்டுவிழா ஆரம்பமாகியது.

இல்லறதொண்டன் இ. யக்கோவு, திரு. அ. மரியதாஸ் இளைப்பாறிய ஆசிரியர் எல். எம். சந்தான், இலசுடிப்பிட்டித் தலைமை ஆசிரியர் ஆர். ஜே. யோசவ், நானாட்டான் தலைமையாசிரியர் பி. சந்தியாக்குரூஸ் ஆகியோர்கள் பாராட்டுரைகள் வழங்கினார்கள். ஆசிரியர் ரி. சிமியோன் வாழ்த்திதழ் வாசித்தளித்தார். திரு. அ. யோவான் அன்பளிப்பும், பொற்கிழியும் வழங்கினார். தனிப்பட்ட அன்பளிப்புகளைத் திரு. செ. வேதநாயகம், திரு. சி. சோமசுந்தரம் ஆகியோர் வழங்கினர்.

விழாநாயகர் தமது உரையில் ஐந்து வருடங்களின்பின் தமது மாணவர்கள் உத்தியோகங்களுடனும், செல்வச்செழிப்புடனும் இருந்து தம்மை அழைத்துப் பாராட்டுவிழா நடாத்தியதற்கு நன்றி கூறி, உங்கட்குக் கிடைத்த உத்தியோகங்களைக் கண்ணுங் கருத்துமாகக் காக்கும்படி அறிவுறுத்தல் கூறினார். தமக்குக் கூறிய நன்றி, தம் உடனாசிரியர்களான திரு. பா. அந்தோனிப்பிள்ளை, திரு. தொ. சிமியோன், திரு. மிக்கேல் விஜயன், திரு. திருமதிகள் ஆர். ஜே. யோசவ், ஒஸ்பீஸ், மரியதாசன் குரூஸ், திருமதி லெம்பேட், திருமதி இம்மனியல், திருமதி செல்வம் சந்தாம்பிள்ளை என்பவர்களையே சாரும எனவும் கூறினார். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. காரியதரிசி முருங்கனாசிரியர் செ. செபமாலை அவர்கள் நன்றி கூறியதோடு விழா இனிது நிறைவெய்தியது.

—பழைய மாணவன்.

## பெற்ரோல் நிலையங்கள்

நாடுமுழுவதிலுமுள்ள சுமார் 1,300 பெற்ரோல் நிலையங்களை மூடினால் பெற்ரோலியம் கார்ப்பரேஷனுக்கு வருடம் ஒன்றுக்கு ஏறக்குறைய 50லட்சம் ரூபா வெளிநாட்டுச்செலாவணி மிஞ்சுமென்றும் இந்த 1,300 பெற்ரோல் நிலையங்களும் தேவைக்கதிகமானவையென்றும் கண்டறியப்பட்டிருக்கிறது. முந்திய அரசாங்கம் தனது தேசியமயமாக்கும் திட்டத்தின்கீழ் அந்நியகம்பெனிகளால் நடத்தப்பட்டுவந்த சகல பெற்ரோல் நிலையங்களையும் பரிசீலனை செய்யாமல் ஏற்றுக்கொண்டது. இவற்றில் நூற்றுக்கு 68விகிதமான நிலையங்கள் தேவைக்கதிகமாகத் திறக்கப்பட்டவை.


மின்சாரத்தில் இயங்கும்


சென்றிக்

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

மண்ணெண்ணெயினால் இயங்கும்

சென்றிக்

யூனியர்—சீனியர்



பாரம் குறைந்த

நீர் இறைக்கும் இயந்திரங்களையும்

எமது பலதரப்பட்ட நீர் இறைக்கும் இயந்திரங்களுடன்

அறிமுகப்படுத்துகிறோம்

ஓட்டோஸ் லிமிட்டெட்

யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1968ஆம் ஆண்டு ஆனிமீ 1-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org